1203

# சிந்தாமணி

29 AUG 1924

தமிழ் நாட்டுப் பெண்மணிகளின் முன்னேற்றத்தை முக்கியமாகக்கொண்டு வெளிவரும்
ஓர் உயர்தர மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

பத்திராதிபர் சகோதரி வி. பாலம்மாள்.

மலர் I.] ஆகஸ்ட், 1924. [இதழ் 1.

பொருளடக்கம்.


| | பக்கம். | | பக்கம். |
|---|---|---|---|
| சுபோத ஸமாசிதம் அர்த்தத்துடன் ... | 2 | [illegible] ... | 18 |
| சிந்தாமணி ... | 3 | புதல்வர்களுடைய [illegible] ... | 20 |
| மாத பத்திரிகை ... | 4 | சர்ப்பங்களின் பாதுகாப்பு ... | 21 |
| பெண்களும் ஓட் சுதந்திரமும் ... | 4 | [illegible] ... | |
| சுகாதாரம் ... | 6 | தேசஜனங்களின் [illegible] ... | |
| சமையலறை—ஒரு சம்பாஷணை ... | 8 | ஒரு வேண்டுகோள் ... | |
| ஸ்ரீ கிருஷ்ண ராஜேந்திர நாடகம் ... | 10 | பத்திராதிபர் குறிப்புகள் ... | |
| பத்மநாபன் அல்லது பணச்செருக்கு—ஒரு சிறு கதை ... | 11 | புத்தகக் குறிப்புகள் ... | |


[All Rights Reserved.]

Y15m2,N24
N24.1.1
190368

## CONTENTS.


| | PAGE. | | PAGE. |
|---|---|---|---|
| ...CHARITAM ... ... | 2 | WOMEN AND NURSING ... | 18 |
| ...ANI ... ... | 3 | THE PUDUKOTTAH STATE ... | 20 |
| ...ES ... ... | 4 | CARE DURING PREGNANCY ... | 21 |
| ...S FRANCHISE ... | 4 | FEVER ... ... ... | 22 |
| ...TION ... ... ... | 6 | INFANTILE DISEASES ... | 25 |
| ...KITCHEN—A DIALOGUE | 8 | A REQUEST ... ... ... | 26 |
| ...MAHARAJAH OF MYSORE (A POEM ...SANSKRIT) ... ... | 10 | EDITORIAL NOTES ... ... | 29 |
| ...DMANABHAN—A SHORT STORY | 11 | REVIEWS, ETC. ... ... | 31 |



இந்தியா, பர்மா, ஸிலோன் இவைகளைப் பற்றிய

# விவகார டைரெக்டரி.

விளம்பரம் செய்வதற்கேற்ற விரிவான பதிப்பு.

வியாபாரிகள், ஏற்றுமதி இறக்குமதி செய்வோர், காரியாலயங்களை வைத்து நடத்துவோர், தொழிற்சாலைகள், பஞ்சு யந்திரசாலைகள் முதலியன இருக்கு மிடங்கள், இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய இடங்களிலிருக்கும் முக்கியமான நகரங்களிலுள்ள தொழிற்சாலைகள், வியாபார ஸ்தலங்கள் முதலியன தெளிவாகவும் விரிவாகவும் இந்த டைரெக்டரியில் அடங்கியிருக்கும்.

பிரதி வருஷத்திலும் பிரசுரமாவது.

## விளம்பர விகிதங்கள்.

| | | |
|---|---|---|
| ¼ பக்கம், புஸ்தகம் இலவசம் | ரூ. 50 | 1 அங்குலம், ஒற்றைப்பத்தி ரூ. 15 |
| 2 அங்குலம், ஒற்றைப்பத்தி | ,, 20 | பெரிய எழுத்துகளில் பெயர் மாத்திரம் ,, 5 |

டைரெக்டரி பிரதி 1க்கு விலை ரூபா 10.

# பிஹினஸ் டைரெக்டரி கம்பெனி,

13, வாலியர் தெருவு, ஜி. டி., மதராஸ்.

...வும் "கேதாகி."



...ரி! பெரிய கம்பேனி!

திருப்தி யில்லாதவைகள் திரும்பப் பெற்றுக்கொள்ளப்படும்.

...வீன நாகரிகத்திற் கேற்றபடி தயாரிக்கப்பட்ட பட்டு சேலைகள், ரவிக்கைகள், துப்...
...தாவணிகள், வெண்பட்டு வேஷ்டிகள், அங்கிகள், சாரங்கள், சாம்பைகள்; உருத்தி...
...ஜபமாலைகள், காசி வயிரவர் பிரசாதக் கயறு, கஸ்தூரி முதலியவை.

...ங்க ளடங்கிய "பட்டு பீதாம்பர" கேட்லாக் 'இனும்.' உடனே எழுதுங்கள்.

...விலாசம் :—மானேஜர், பட்டு பீதாம்பர கம்பெனி, காசி.



29 AUG 1924



ஸ்ரீமதி ஸரோஜினி தேவி

## தென்னாப்பிரிக்காவின் நிலைமை.

"தென்னாப்பிரிக்காவில் ராஜ்ய விஷயங்களில் தாராள புத்தி காட்டப்படாமற் போனாலும் மற்ற விஷயங்களில் தாராள மனது காட்டப்படுகிறது. எல்லா வகுப்பினரும் என்னை வரவேற்று உபசரிப்பது இத்தேசத்திலுள்ள எனது சகோதர சகோதரிகள் நடத்தப்படுவதற்கு நேர் விரோதமாக விருக்கிறது. ஏதோ காரணமில்லாமல் ஒரு பயத்தினாலும், தப்பபிப்பிராயத்தினாலுமே இப்பொழுது தோன்றியுள்ள கஷ்டங்க ளேற்பட்டிருக்கின்றன. ஒரு சர்வ கக்ஷிபக மகாநாட்டைக் கூட்டி அவரவர்கள் தங்கள் தங்கள் அபிப்பிராயங்களைச் சபை முன்னிலையில் வெளியிட்டால் இவ்விஷயங்கள் ஒரு விதமாக முடிவு செய்யப்படலாம். தென்னாப்பிரிக்கா விஷயத்தில் இப்பொழுது மிகுந்த தீர்க்க தரிசனம் காட்டப்பட வேண்டும். இந்தியாவிலுள்ள கிளர்ச்சி நடந்து வரவேண்டுமென்றும் ஆனால் அது எவ்விதத்திலும் விரோதப் பான்மையைக் காட்டக் கூடாதென்றும் எனக்குத் தோன்றுகிறது."—ஸ்ரீமதி ஸரோஜினி தேவியின் அபிப்பிராயம்.

# CHINTHAMANI.


A HIGH CLASS TAMIL MONTHLY.

*(Devoted mainly to the cause of Indian Women.)*

EDITED BY SISTER V. BALAMMAL.

**Vol. I. August 1924. No. 1.**

श्रीशारदायै नमः ।



श्रीरामचन्द्र परब्रह्मणे नमः

Xerox copy 7
190368
212419
190368
சென்னை-600 008

# சிந்தாமணி.

## சுபோத ராம சரிதம்.

COMPOSED AND ANNOTATED

BY

SISTER V. BALAMMAL

DAUGHTER OF

*Late Dr. A. R. VAIDYANATHA SASTRIAR, M.A., M.B., C.M.*

*(All Rights reserved by the Authoress.)*

### सुबोधरामचरिते

#### बालकाण्डः

लीलामानुषवेषो नीलाम्बुदशोभिदेहसुकुमारः ।
सालाभिरामबाहुः बालाविनुतो रघूद्वहो जयति ॥

साकेतपुरनिवासं नाकेशसभाज्यपङ्क्तिरथपुत्रम् ।
स्तोकेतरप्रतापं राकेन्दुमुखं नमामि रघुवीरम् ॥

प्रणम्य जगतामीशं श्रीहरिं श्रितवत्सलम् ।
सुबोधरामचरितं कृतं बालाम्बिकाख्यया ॥ १ ॥

श्रितवत्सलं பக்தர்களிடம் அன்புள்ளவராயும், जगतामीशं உலக நாயகராயும் இருக்கும், श्रीहरिं லக்ஷ்மியுடன் கூடிய ஹரியை, प्रणम्य நமஸ்கரித்து, बालाम्बिकाख्यया பாலாம்பிகை என்பவரால், सुबोधरामचरितं சுபோதராம சரிதம் (என்ற நூல்), कृतं செய்யப்பட்டது.

राजा दशरथो नाम सूर्यवंशसमुद्भवः ।
अयोध्यानगरेऽवात्सीत्प्रजाः स्वाः परिपालयन् ॥ २ ॥

सूर्यवंशसमुद्भवः சூரிய வம்சத்தில் உதித்தவராயும், दशरथो नाम தசரதரென்ற பெயருமுள்ள, राजा அரசன், स्वाः தன்னுடைய, प्रजाः பிரஜைகளை, परिपालयन् பரிபாலித்துக்கொண்டு, अयोध्यानगरे அயோத்திமா நகரில், अवात्सीत् வசித்து வந்தார்.

*(To be continued.)*

JL
115/12) ...
11.9.1.32

ஸ்ரீராமஜயம்.

# சிந்தாமணி.

தமிழ் நாட்டுப் பெண்மணிகளின் முன்னேற்றத்தை முக்கியமாகக்கொண்டு வெளிவரும் ஓர் உயர்தர மாதாந்தத் தமிழ் பத்திரிகை.

பத்திராதிபர் — சகோதரி வி. பாலம்மாள்.

மலர் I.] ஆகஸ்ட் 1924. [இதழ் 1.

## சிந்தாமணி.

தேச முன்னேற்றத்திற்கும் தேச மகாஜனங்களின் கல்வி வளர்ச்சிக்கும் தேச பாஷையிலுள்ள பத்திரிகைகள் சிறந்த சாதனங்கள் என்பது ஆன்றோர்களின் அபிப்பிராயம். ஜன சமூகத்தில் ஒவ்வொரு வகுப்பும் தனது முன்னேற்றத்தைக் குறித்துப் பாடுபடுவது பலிக்க வேண்டுமாயின் பிற வகுப்புகளின் க்ஷேமலாபங்களையும் கவனித்து நடத்தல் அவசியமாகும். இங்ஙனமாக ஒருவருடைய அபிவிருத்தியை மற்றவர் கவனித்துக் கொள்ளுவதால் நாம் நம்மைப்பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை என்று ஒருவரும் எண்ணி விடுதல் கூடாது. இக்காரணம்பற்றி நம் தமிழ் நாட்டுச் சகோதரிகளின் அபிவிருத்தியை முக்கிய காரணமாகவும் மற்ற விஷயங்களைப் பொதுவாகவும் உத்தேசித்து இத்தமிழ் மாதப் பத்திரிகையை வெளியிட முன்வந்திருக்கிறேன். அவசியமான சகல விஷயங்களும் இதிலடங்கியிருக்கு மென்ற காரணம் பற்றி இதற்குச் சிந்தாமணி என்று பெயரிடலாயிற்று. நிமிஷத்திற்கு நூற்றுக் கணக்காக வெளிவந்து கொண்டிருக்கும் தமிழ் பத்திரிகைகள் ஒவ்வொன்றும் மற்றவைகளை மறை பொருளாகவேனும் ஒரு சிறிது குறை கூறித் தன்னால் உலகம் க்ஷேமமடையப் போகிறதென்று விஸ்தாரமான முன்னுரையுடன் வெளியாகின்றன. பெண்மகளாகிய என்னால் ஆரம்பிக்கப்படும் இப்பத்திரிகையில் அவ்விதமான புகழ்ச்சி வாசகங்களை வெளியிட நான் துணியவில்லை. தேசத்தொண்டு புரிவதையே தொழிலாகக் கொண்டிருக்கும் சகோதர சகோதரிகளின் முன்பாக நான் வணக்கத்துடன் விக்ஞாபனம் செய்துகொள்ளுவதென்னவென்றால் என்னாலியன்றவரை ஜன சமூக ஊழியம் செய்யவேண்டுமென்ற பேராவலுடன் சிந்தாமணி என்ற இத்தமிழ் மாதப் பத்திரிகையை ஆரம்பித்திருக்கிறேன் என்பதுதான்.

சிந்தாமணியில் பெண்கல்வி, மாணவர் முன்னேற்றம், தொழிலாளர் நிலைமை, நீதிமொழிகள், சுகாதாரம், நவீன கதைகள், புராண ஆராய்ச்சி முதலிய பல விஷயங்களும் வெளிவருமாகையால் தமிழ் நாட்டிலுள்ள சகோதர சகோதரிகள் அனைவரும் என் முயற்சியை ஆதரித்து என்னைக் கௌரவிக்க வேண்டுமாய்க்

190368



கேட்டுக் கொள்ளுகிறேன். பெண்மக்களின் அபிவிருத்திக்கு ஆடவர்களும், ஆசார சீர்திருத்தங்கள் நேர்மையான வழியில் பரவுவதற்கு மாணவ சகோதரர்களின் ஒற்றுமையும், தேசியக் கல்விக்குப் பெற்றோர்களின் ஆதரவும், தேச க்ஷேமத்திற்குப் பெண்மக்களின் சகாயமும் காரணமாயிருத்தல் பற்றி ஆடவர்களும் மாணவர்களும் பெரியோர்களும் பெண்மக்களும் சந்தாதாரர்களாகச் சேர்ந்தும், வியாஸங்களெழுதியும் இச்சிந்தாமணியைச் சிறப்பிக்கக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

சகோதரி வி. பாலம்மாள்.

## நமது பத்திரிகை.

கட்டாய இலவசக் கல்வி, பெண்களுக்கு ஓட் சுதந்திரம் இவைகள் ஏற்பட்டுவரும் இச்சமயத்தில் பத்திரிகைகள் எவ்வளவுக் கெவ்வளவு அதிகரிக்கின்றனவோ அவ்வளவுக் கவ்வளவும் உபயோகம் அதிகமென்பதை மறுப்பாரில்லை. சிந்தாமணி என்ற பெயருடன் மாத மொருமுறை வெளிவரும் இப்பத்திரிகையில் அரசியல், பெண்மக்கட்க்குரிய படிப்பு, வீட்டுக் கைத்தொழில், பண்டைக் காலத்துப் பெண்கள் வாழ்க்கை, வீரத் தாய்மார்களின் சரித்திரம், ஜனசமூகத் தேவைகள், ஸ்தல சுய ஆட்சியின் அமைப்பு, ஜனப்பிரதிநிதிகளின் பொறுப்பு, சங்கங்களின் அவசியம், தாழ்ந்த வகுப்பாரின் முன்னேற்றம், பெரியோர்களின் பிரசங்கங்கள், தேசாபிமானிகளின் தத்துவங்கள், பரோபகாரம், ஒற்றுமை, பெண் மக்களின் சிறப்பு, குழந்தை வளர்த்தல், சுகாதார வழிகள், சம்பாஷணைகள், சிக்கனம் இந்துக் குடும்ப வாழ்க்கையைச் சிறப்பிக்கும் வழியில் எழுதப்படும் நாவல் என்ற நவீனங்கள், உத்தம தேசாபிமானிகளின் சரித்திரங்கள், அந்நிய மொழிகளிலுள்ள உபயோக விஷயங்களின் மொழிபெயர்ப்புக்கள், ஆசார சீர்திருத்தம், சமாச்சாரக் கொத்து, டத்தகக் குறிப்பு, இந்தியத் தொழில்களின் சிறப்பு, இவை போன்ற பல விஷயங்கள் சமயோசிதமாக எழுதப்படும்.

தமிழபிமானிகளும் ஸ்திரீ வித்யாபிமானிகளும் இச்சிந்தாமணியை ஆதரித்தல் கடமையாகும். சிந்தாமணியின் அபிவிருத்திக்குப் பாரத மாதாவின் பரிபூரண கடாக்ஷமும் தமிழ்நாட்டுச் சகோதர சகோதரிகளின் ஆதரவும் பூரணமாய்க் கிடைக்கும்படி எல்லாம் வல்ல கடவுளைப் பிரார்த்திக்கின்றோம்.

பத்திராதிபர்.

## பெண்களும் ஓட் சுதந்திரமும்.

சென்னை மாகாணத்தில் பெண்களுக்கு ஓட்டுரிமை கிடைத்திருப்பது பற்றியும் இன்னம் அதிகம் கிடைக்கவேண்டியவைகளைப் பற்றியும் பேசுங்கால் பல கேள்விகள் உண்டாகின்றன. 1. பெண்கள் ஜனப் பிரதிநிதி ஸ்தானம் வகிக்காவிடில் தேசம் முன்னேற்ற மடையாதா? 2. ஆடவர்களுக்கிடையில் பெண்கள் சமமாக வீற்றிருத்தல் தகுதியா? 3. பொது ஜன ஊழியத்தில் பெண்களுக்கு என்ன தெரியும்? 4. பெண்கள் இவ்விதம் வெளியில் வந்துவிட்டால் வீட்டுக் குடித்தனம் யார் செய்கிறது? இது போன்ற பல கேழ்விகளுக்கு மரியாதையுடன் தக்க பதில் அளித்தல் அவசியம். இந்தியாவின் குடும்ப வாழ்க்கையும் ஆசார அனுஷ்டானங்களும் முற்காலம் போல இருந்துவிடும் பக்ஷத்தில் அக்காலம் போலவே பெண்களும் தங்கள் நிலைமையில் இருந்துவிடல் சாத்தியமாகும். உலக விஷயங்கள் முழுதும் முற்காலத்திற்குத் தற்காலம் தலைகீழாக மாறி வருகின்றன. இதற்கு ஆசார சீர்திருத்த மென்று படித்தவர்களாலும் நாகரிகம் என்று பாலியர்களாலும் சந்தர்ப்பத்திற்கேற்ற முற்போக்கு என்று தேசாபிமானிகளாலும் கலிகாலக் கோலாகலமென்று முதியவர் சிலராலும் காரணம் கூறப்படுகிறது. கால ஸ்திதிக் கேற்றவாறு புதிய சட்டதிட்டங்களும் சீர்திருத்தங்களும் உண்டாகின்றன. பெண்பாலர் விஷயங்களில் முடிவு கூறவும் எதிரிடையான விஷயங்களைத் தடுப்பதற்கும் ஜனப்பிரதிநிதி ஸ்தானங்கள் பெண்களுக்கு அவசியமில்லையா? கல்வி, கேள்வி, ஞானம், ஆராய்ச்சி இவைகளில் ஆடவர்களால் போற்றக் கூடிய நிலைமையில் இந்திய மாதர்கள் முற்காலம் வாழ்ந்து வந்திருக்கிறார்களென்பது சரித்திர சித்தமல்லவா? தற்காலம் கிராமாந்தரங்களிலும் ஆலயங்களிலும் ஆறுகுளங்களிலும் விவாகாதி சுபகாரியங்களிலும் நவநாகரிகத் தோரணைகளிலும் பெண்களும் ஆடவர்களும் சமமாகக் கண்ணியத்துடன் நடந்து கொள்ளவில்லையா?

ஸ்தல சுய ஆட்சி நிர்வாகங்கள் நன்கு நடைபெறுவதற்கும் அவசியமான புதிய ஆசார சீர்திருத்தங்களுக்கும் தம் குழந்தைகளின் கல்வியபிவிருத்தியில் தக்க சிரத்தை யெடுப்பதற்கும் பெண்களின் உழைப்பும் ஆலோசனையும் தேவை யில்லையா?

குடும்ப வாழ்க்கைக்கும் குடித்தனக் காரியங்களுக்கும் மூலகாரணமான பெண்கள் தேச நன்மைக்குப் பாடுபடும் போது சொந்த கிருஹ கிருத்தியங்களை மறந்து விடுவார்களா?

குடும்ப நிர்வாகத்தையும் தாம் பெற்ற குழந்தைகளை வளர்ப்பதையும் வேலைக்காரர் வசம் ஒப்புவித்துவிட்டுக் கவலை யின்றிக் கணவன் தேடுவதைத் தின்று தெரித்துவிட்டுப் பொழுது போக்கும் பெண்கள் ஆங்காங்குச் சிலரேனும் தற்காலத்தி லில்லையா? இக்காரணங்களால் ஆரம்பத்தில் ஏற்படும் கேள்விகள் வீண் வாதத்தினாலும் பொறாமையினாலும் ஏற்பட்டன வென்பதையே விளக்கிக் காட்டுகின்றன.

முற்காலத்தில் பெண்கள் உண்மையுடனும் தைரியத்துடனும் முன் நின்றதால் பல அரிய பெரிய விஷயங்கள் உலகத்திற்கே க்ஷேமமான வழியில் நடைபெற்றன வென்பதைப் புராணக் கதைகள் புகழ்கின்றன. அவர்களெல்லாம் ஓட் சுதந்தரத்தாலும் சட்டசபைகளில் ஸ்தானம் பெற்றதினாலுமா மேன்மை யுற்றார்கள் என்று கேட்கலாம். அக்காலத்திய ஆடவர்கள் ஓட் பெற்றுத்தானா உலக நன்மைகள் செய்தார்கள் என்று நாம் கேட்டால் இக்காலத்தில் இப்படித்தான் செய்ய வேண்டியிருக்கிறதென்று தானே பதில் கிடைக்கப்போகிறது. அது போலவே பெண்களும் தற்காலத்திற்கேற்றவாறு ஒருபடி முன்வருவார்களானாலும் அதனால் இந்தியா இழந்திருக்கும் சிறந்த நாகரிகத்தையும் அனுஷ்டானங்களையும் மீண்டும் புத்துயிர் பெறச் செய்வதிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்து சத்தியத்தையும் கண்ணியத்தையும் நிலை நிறுத்துவார்கள் என்பதில் தடையில்லை. பெண்கள் விஷயங்களைப்பற்றி ஆடவர்கள் மட்டும் பொதுக் கூட்டங்களில் பேசுவதும் சட்டசபைகளில் தீர்மானப் படுத்துவதுமாக இருந்து கொண்டிருக்கும் பக்ஷத்தில் இந்தியா ஒரு காலத்திலும் விருத்தியடையமாட்டாது. பெண்களுக்குச் சட்டசபை போன்ற இடங்களில் சுதந்திர மளித்துவிட்டால் ஹிந்து குடும்ப வாழ்க்கையின் உயர்ந்தநோக்கம் உருக்குலைந்துவிடுமோ என்று அஞ்சுவார் சிலர். ஆடவர்கள் அமிழ்ந்தெழுந்த அயல்நாட்டு நாகரிகத்துறையில் நம் பெண்மக்கள் மூழ்கி விடுவார்களோ என்று யோசிப்பார் சிலர். இவ்விதமான பல காரணத்தினாலேயே தொன்றுதொட்டு இந்தியாவில் சமபங்கு பெற்றிருந்த பெண் சுதந்திரமானது தற்காலம் உருக்குலைவுற்று அதற்கு லக்ஷணமின்னதென்றும் உபயோகமின்னதென்றும் அறியமுடியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கிறது. ஆசார சீர்திருத்த மென்று வீண் பேச்சுக்கள் மட்டும் பேசிக் கொண்டும் விதவா விவாக மென்று சொல்லிக்கொண்டும் ஆடவர்

களும் பெண்களும் ஒருவருக்கொருவர் தாழ்ந்தவர்களல்ல வென்றுரைத்தும் உயர்தரக் கலாசாலைக் கல்வியாலேயே பெண்ணுலகம் ஈடேறப் போகிறதென்றும் ஆடவர்கள் காலங்கழிப்பது பெண்களுக்கு உண்மையான சுதந்திரத்தைக் கண்ணியமான வழியில் காட்டக்கூடியதல்ல. விஷயங்கள் முழுதும் சட்டதிட்டங்களிலும் அவைகளை உள்ளடக்கி இருக்கும் சட்ட சபைகளிலும் இருந்து கொண்டிருப்பதால் மாகாண சட்டசபைகளிலும் இந்தியா சட்டசபையிலும் ராஜாங்க சபையிலும் பெண்கள் ஸ்தானம் வகிக்க வழிதேடல் முக்கிய விஷயமாகும். சட்டசபைகளில் ஆடவர்கள் பிரவேசித்த ஆரம்ப காலத்தில் யாரை நம்புவது, யாரைத் தேர்ந்தெடுப்பது, எவரால் நன்மை விளையும் என்று ஜனங்களிடையிலும், பல கட்சிகளும் அபிப்பிராய பேதமும் சட்ட சபைக்குள்ளும், ஆக இவ்வித பலகுழப்பங்களிருந்த போதிலும், ஜனங்கள் கண் விழித்த தற்சமயம் சுயராச்சிய மடைவதே நமது நோக்கமென்ற உறுதியுடனும் உலக க்ஷேமமே சிறந்ததென்ற ஊக்கத்துடனும் இருக்கும் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்க வில்லையா? அது போல ஆரம்பத்தில் எவ்வித மிருந்தபோதிலும் அதிசீக்கிரத்தில் இந்தியாவின் பூர்வீக தத்துவங்களையும் உயர்வையும் நிலைநாட்டக்கூடிய பெண்மக்கள் சட்ட சபைகளில் ஸ்தானம் பெற்று இந்தியப்பெண்களின் உயர்வையும் ஸ்தாபித்து அன்புள்ள தாய்மார்களென்றும் அருமைச் சகோதரிகள் என்றும் புகழ்பெற்று விளங்குவார்கள் என்பதில் சந்தேகமே இல்லை. ஸ்திரீகள் சட்டசபைகளில் ஸ்தானம் வகிக்கிறார்கள் என்றால் அச்சமயம் பெண்ணுலகம் தன் தேவைகளை உணர்ந்து அவைகளைப் பெறுவதற்கு முன் வருமாதலால் அச்சமயமே பொதுவாய் அவைகள் இன்னதென்று வெளிப்படையாகத்தெரியவரும். இந்தியப் பெண்கள் கிருஹ தேவதைகளாயும் குடும்ப அதிகாரிகளாயும் உலகக்ஷேமத்திற்குக் காரண மூர்த்திகளாயும் விளங்குவதால் அவர்கள் ஜனப்பிரதிநிதி ஸ்தானங்களை வகித்தால் தம் இனத்தாருடைய நன்மையுடன் தம் சகோதரர்களுடையவும் மக்களுடையவும் க்ஷேமலாபங்களை நன்குணர்ந்து அன்னையாகிய பாரதமாதாவிற்குத் தொண்டு புரிந்து ஏழை மக்களின் கண்ணீரைத் துடைத்து இந்தியா முன்போல் செழித்தோங்கச் செய்வார்களென்பது ஸத்தியம். ப-ர்.

## சுகாதாரம்.

வி. பாலம்மாள்.

ஸாதாரணமாக “சுகாதாரம்” என்று சொன்னால் நகரவாசிகள் அது முனிசிபாலிடியில் இருக்கும் ஒரு வஸ்துவாயும் அந்த ஆளுக்குக் கொஞ்சம் எடுத்துக் கொடுப்பதற்காகவே சுகாதார உத்தியோகஸ்தர் இருப்பதாகவும் நினைப்பது ஸகஜமாயிருக்கிறது. அசுத்தங்களைச் சுத்தி செய்விக்கவும், விளக்கு வெளிச்சம், சாலைகள், வைத்தியசாலைகள், கல்விச்சாலைகள் இவைகளை ஏற்படுத்துவதிலும், நகர பரிபாலன சபைக்கும் அதிலுள்ள நிர்வாகிகளுக்கும் பொறுப்பு இருத்தல் அவசியமானாலும் சுகாதாரம் என்பது நகரவாசிகள் தமக்குத் தாமாகவே கவனிக்க வேண்டியது முக்கியமாகும். நோயணுகாமலிருப்பதற்கு ஆரோக்கியம் காரணமாயிருப்பதால் சுகாதார வழியை ஒவ்வொருவரும் கவனித்து நடத்தல் ஜனங்கள் கடமையல்லவா? குடியிருப்பு வீட்டையும் உடுக்கும் உடைகளையும் சுத்தமாக வைத்துக் கொள்ளுவதுடன் ஆகார விஷயங்களிலும் மிதமாகவும் ஜாக்கிரதையாகவு மிருத்தல் சுகாதாரத்திற்கேற்ற தென்பது பலரறிந்த விஷயம். ஜனங்களின் பேராசையும் வணங்கா முடித்தனமும் அசட்டுச் செட்டும் ஆடம்பர வாழ்க்கையுமே சுகாதாரத்தைக் கெடுத்து விடு



கின்றன. வீட்டைக் காற்று வெளிச்சங்களின்றி நெருக்கமாகக் கட்டி அதிகக் குடித்தனங்களை வைத்துப் பணம் சம்பாதிக்க வேண்டுமென்ற பேராசை யுள்ளவர்களின் வீட்டைக் கவனிப்போம். கட்டடங்கட்டுவதில் சில நிபந்தனைகளிருப்பினும் அவ்வதிகாரிகள் வந்து பார்த்துப் போமளவும் ஒரு விதமாகக் காண்பித்துப் பிறகு ஓர் அறையை ஒன்பது தடுக்குக் கட்டிக் குடிக்கூலி சம்பாதிப்போர் சிலர். சுமார் ஐந்து ஆறுபேர்கள் வசிக்கக் கூடிய விடத்தில் ஐம்பது பேர்களை குடிவைப்பார் பலர். குப்பைவாரிகளுக்குச் சம்பளம் பேசும்போது பத்துப்பேர்கள் தான் என்று சொல்லி முப்பது நாற்பதுபேர்கள் உபயோகிக்கும் கக்கூஸ்கள் எவ்வளவு. பணத்தாசை மேலிட்டுப் பலரைக் குடிவைக்கும் வீடுகளில் சுத்தமென்பது காணக் கிடைக்காது. முற்றத்திலுள்ள குப்பையை எடுக்காமலும் தெருப்பெருக்காமலும் கக்கூஸ் சுத்தம் செய்யத் தண்ணீர் வார்க்கப்படாமலும் உனக்கென்ன எனக்கென்ன என்ற போட்டியில் துர்நாற்றம் வீசும் வீடுகளில் சுகாதாரமெங்கிருக்கும்? வீட்டைச் சுத்திசெய்து நன்றாக வைத்துக் கொள்ள வணங்காத வீடுகளிலும் சுகாதாரமிருக்குமா? விலைக்கு அரையணா லாபமென்று காய்ந்த அழுகிய காய்கறிகளை வாங்குவதாலும் மக்கிப் போன அரிசி ரூபாய்க்கு நான்குபடி விற்பதால் அதைப் பணியாரங்களுக்கு உபயோகிக்கலாமென்ற அசட்டுச் செட்டினாலும் ஏற்படும் அனாரோக்கியம் எவ்வளவு!

நாள் தவறாமல் சினிமா செல்லுவதும் நாடக சாலைகளில் கண்விழிப்பதும் அங்குள்ள தின்பண்டங்களைக் குழந்தைகளுக்கும் கூசாமல் வாங்கிக் கொடுப்பதுமான ஆடம்பரக்காரரிடமும் சுகாதாரம் ஏது? ஆனால் இத்தகைய குணங்கள் படித்தவர் படியாதவர் ஏழை பணக்காரர் என்ற வித்தியாச மென்பதில்லாமல் சமமாகப் படிந்திருப்பதை நமது சென்னை நகரில் சிறப்பாகக் காணலாம். காப்பி ஹோட்டல்களும் போஜன விடுதிகளும் ஜனங்களுக்கு உபயோகமானவைகள் தான். அயலூரார்களுக்கும் அலைச்சல் மிகுதியால் வேளா வேளைக்கு ஆகார மில்லாதவர்களுக்கும் குடும்ப சௌகரிய மில்லாதவர்களுக்கும் இவை மெத்த உபகாரிகளாயிருப்பது உண்மை. ஹோட்டல் காப்பிதான் ருசியென்றும் அங்குள்ள தின்பண்டங்கள்தான் இனிப்பென்றும் கருதும் படிப்பாளிகளை என்னென்று சொல்வது! சாதாரணமாகக் காப்பி தேயிலை பானம் செய்யக்கூடிய நேரங்களை விடுத்து அர்த்த ராத்திரி வரையில் ஹோட்டல்களில் காப்பி சாப்பிடுவதும் சிற்றுண்டி தின்பதுமாக இருப்பார்களானால் இவர்களுக்கு இராப்போஜன மெப்பொழுது? ஜீரணிப்பதெங்ஙனம்? பிறகு காப்பி ஹோட்டல்களால் சுகாதாரம் கெட்டுவிடுகின்றதென்றால் இதன் பொறுப்பு யாரைச் சேர்ந்தது? தின்பண்டங்களைச் சரியாகத் தயாரிக்கிறார்களா என்பதை கவனிக்க இன்ஸ்பெக்டர்கள் இருக்கிறார்கள். அவர்கள் லஞ்சம் வாங்குகிறார்களென்ற அவதூறு, நன்றாயிருக்கிறதாவென்று ருசி பார்ப்பதாலும் நல்ல பெயர் வாங்க வேண்டுமே என்ற பயத்தால் ஹோட்டல்காரர் செய்யும் உபசாரத்தாலும் இன்ஸ்பெக்டர்களுக்கு ஏற்படும் அஜீரணம் இவைகளுக்கு உத்திரவாதி யார்? இன்னம் சில காலம் சென்றால் சிற்றுண்டிசாலைகளுக்கு லைஸன்ஸ் அளிப்பதில் சட்டங்களும் அவைகளை இவ்வளவு நேரந்தான் திறந்துவைக்க வேண்டுமென்ற நிபந்தனைகளும் உண்டாகலாம். ஆனால் இவைகளால் நகரில் சுகாதாரம் விருத்தியாகப் போகிறதில்லை என்பது நிச்சயம். இவ்வாறு ஜனங்களும் சுகாதாரத்தைப் பற்றித் தாமாக சிரத்தை யெடுக்காததுடன் நகர பரிபாலன நிர்வாகிகளின் சில காரியங்களாலும் சுகாதாரம் இருக்குமிடம் தெரியாமல் ஓடி ஒளிப்பதைப் பற்றி அடுத்த சஞ்சிகையில் கவனிப்போம்.

## சமயலறை — ஒரு சம்பாஷணை.

### காமாக்ஷியும் அடுத்த வீட்டு மீனாக்ஷியும்.

காமாக்ஷி:—என்னடி மீனா, நீ புக்காத்திலிருந்து என்று வந்தாய்? உன்னைப் பார்த்து ஒரு மாதமாயிற்றே.

மீனாக்ஷி :—நான் நேற்றுத்தான் வந்தேன். அப்பா அழைத்து வந்தார்.

காமா :—உங்கள் மாமனார் பணக்காரராமே. இந்திர லோகம் போல் பெரிய வீடு கட்டியிருக்கிறாராமே.

மீனா :—ஆம். மாமனார் படித்தவர். பணக்காரர். வீட்டை பெருத்த பணச்செலவில் கட்டி முடித்திருக்கிறார்.

காமா :—சுவரெல்லாம் சன்ன காரை யிட்டு படிகக் கல்தளவரிசைகளும் மின்சார விளக்குகளுமாக இருக்கிறதாமே.

மீனா :—ஆமாம். இதெல்லாம் வீண் பணச்செல வன்றி வேறென்ன ? நாட்டுப்புறத்திலிருக்கும் நம்ம வீடுகளுக்கு ஈடாகாது.

காமா :—என்ன ! என்ன ! அடி பைத்தியக்காரி. பட்டணக்கரையில் பங்களாவில் குடித்தனம் செய்ய அதிருஷ்டம் வேண்டாமா.

மீனா :—பட்டணக்கரைகளில் வீண் ஆடம்பரத்தில் பணம் செலவாகிறதன்றி உபயோகமொன்றுமே இல்லை. யாரோ இஞ்சினீர் சொன்னாராம். சமைக்கு மிடம் நாற்பதடி நீளமும் அதற்கேற்ற அகலமுமாயிருக்கிறது.

காமா :—அதனாலென்ன ? வேண்டிய இலைகள் போடலாமே.

மீனா :—சமையலறை வேறு, சாப்பிடு மிடம் வேறு என்றிருந்தால் நன்றாயிருக்கும். சமைக்கும் புகை அங்கே, சாப்பிடுபவர்கள் அங்கே, சமைப்பவர்கள் அங்கே, சாமான்களும் அங்கேதான் என்றிருந்தால் நன்றாயிருக்குமா ? சமையலறை எப்போதும் பெண்கள் நடமாடு மிடமாயிற்றே. அவ்விடத்திலேயே ஆடவர்களும் சாப்பிட உட்கார்ந்து விட்டால் எங்கள் பாடு திண்டாட்டம் தான். கையிலெடுத்ததெல்லாம் பயத்தில் கீழே விழாத நாளில்லை. அதையேன் எடுத்தாய் ; இதையேன் போட்டாய்; அடுப்பில் இன்னம் என்ன வைத்திருக்கிறாய் என்று கேட்டுக்கொண்டிருந்தால் வேலை எப்படி ஓடும் ? அடுக்குள் என்றால் பெண்கள் ஆபீஸ் அறைதானே. அதிலேயே புருஷர்களும் சாப்பிட உட்கார்ந்து விட்டால் என்ன செய்கிறது ? உட்கார்ந்தும் நின்றும் பலவிதமாய்ப் பெண்கள் வேலை செய்யுமிடத்தை சாப்பாட்டிற்கு முபயோகிப்பது நன்றாயில்லை யம்மா.

காமா :—இது சரிதான். தளவரிசை நன்றாயிருந்தால் பெருக்கி மெழுக சுலபந்தானே.

மீனா:—சமயலறையில் உயர்ந்த தளவரிசை போட்டிருக்கு. உப்புக்காரம் படுவதால் அவைகள் சொத்தை சொள்ளையாயிருக்கின்றன. பாக்கியிடங்களில் மழ மழப்பான கல்கள் போட்டிருப்பதால் குழந்தைகள் கீழே விழாத நாளில்லை. அதைத் துடைப்பதற்கும் பெருக்குவதற்கும் பொழுது சரியாயிருந்தாலும் சுத்தமாயில்லாமல் துணி அழுக்குப் பட்டால் விகாரமாயும் பொட்டு ஜலம் சிந்திவிட்டால் காயாமலும் இருக்கிறது.

காமா :—அது போகட்டும். மின்சார விளக்கென்றால் பளீரென்றிருக்குமல்லவா. தினம் துடைக்க வேண்டுமே, ஏற்ற வேண்டுமே என்ற கவலை இல்லாமலிருக்கலாமே.



மீனா :—மின்சார விளக்குப் பெருமைக்கு போடப்பட்டிருப்பதன்றி முழுதும் எரிக்கப்படுவதில்லை. ஒவ்வொரு அறையிலும் போகும்போது விளக்கை திருப்பி வெளியில் வரும்போது அணைத்து விடுவதால் வீட்டில் முக்கால் பாகமும் இருள் சூழ்ந்து தான் கிடக்கும். திடீரென்று சாப்பிடும் பொழுதும் படிக்கும் பொழுதும் வேலை செய்து கொண்டிருக்கும் பொழுதும் விளக்கு அணைந்து விடுவது முண்டு. பணச்செல்வை உத்தேசித்து திடீரென்று விளக்கை பிரகாசமாய் ஏற்றி விட்டு மறு நிமிஷத்தில் அணைத்து விடுவதால் கண்களுக்கும் உபாதி ஏற்படுகிறது.

காமா :—நீ சொல்லுவது நியாயமாகவே இருக்கிறது. பட்டண வாசத்துக் காரியங்களெல்லாம் இப்படித்தான் இருக்கும் போலிருக்கிறது.

"நான் இங்கே ஒரு மாத மிருப்பேன். அடிக்கடி இங்கு வந்து விஷயங்களைச் சொல்லுகிறேன். இன்று நாழிகையாய் விட்டது. போய் வருகிறேன்," என்று காமாக்ஷியிடம் மீனாக்ஷி உத்திரவு பெற்று வீடு சென்றாள்.



HIS HIGHNESS SIR KRISHNA RAJENDRA UDAYAR BAHADUR, G.C.S.I.,
MAHARAJAH OF MYSORE.

श्रीमन्महाराजराज

## श्रीकृष्णराजेन्द्राष्टकम् ।

---

॥ शुभमस्तु ॥

चामुण्डी विषभोजनश्च सततं श्रीरङ्गनाथप्रभु-
यस्यानन्तसुखप्रदाश्च वरदा येन स्तुताः पूजिताः ।
कावेरीति सरिद्यदीयनगरीभागोद्भवा दृश्यते
सोऽयं कृष्णमहीपतिर्गुणनिधिर्वर्ण्यः कथं मानवैः ॥ १ ॥

यत्पुर्या धरणिर्मुदा वसुमतील्यन्वर्थनामान्विता
यद्भूपस्य चिरन्तनं मणिवरैरुद्भासि सिंहासनम् ।
प्रासादशिखरोन्नतः परिलसत्प्राकाररम्यो नवः
सोऽयं कृष्णमहीपतिर्गुणनिधिर्वर्ण्यः कथं मानवैः ॥ २ ॥

विद्युत्कान्तिलसत्प्रदीपकिरणैस्संशोभते यत्पुरी
धीमद्भिस्सचिवैः प्रजाहितकरैर्विप्रोत्तमैर्यत्सभा ।
जात्यश्वैर्निबिडा मदद्विपवरैः पूर्णा च यद्वाहिनी
सोऽयं कृष्णमहीपतिर्गुणनिधिर्वर्ण्यः कथं मानवैः ॥ ३ ॥

स्त्रीविद्यानिलयश्च यस्य नगरे जात्यन्धविद्यालयो
विद्वल्लालितवेदशास्त्रललिता श्रीपाठशालोज्ज्वला ।
नानावृक्षलताकदम्बसहिता रामाभिरामा गृहाः
सोऽयं कृष्णमहीपतिर्गुणनिधिर्वर्ण्यः कथं मानवैः ॥ ४ ॥

नित्यं क्षेमयुतास्सुभिक्षसहितास्सम्पूर्णकामान्विताः
नाथप्रीतियुता रिपुव्यवहितास्सत्कर्मभिः पोषिताः ।
सप्रमोदस्थरराजभक्तिसहितास्सर्वा यदीयाः प्रजाः
सोऽयं कृष्णमहीपतिर्गुणनिधिर्वर्ण्यः कथं मानवैः ॥ ५ ॥

केयूरादिमहाविभूषणधरं सिंहासने सुस्थितं
दीव्यद्भिर्मगधैश्च पण्डितसभास्तारैर्वृतं यं नृपम् ।
नानादेशभवा जनाश्च नवरात्रेऽन्वेतुमाशासते
सोऽयं कृष्णमहीपतिर्गुणनिधिर्वर्ण्यः कथं मानवैः ॥ ६ ॥

आह्येभवरं यशः पटहभेर्याद्यैस्सुवाद्यैर्युतो
हर्म्यस्थैरभिकीर्यमाणकुसुमव्यूहार्चितस्स्त्रीजनैः ।
सानीकश्च पुरप्रवेशसमये यो भूपती राजते
सोऽयं कृष्णमहीपतिर्गुणनिधिर्वर्ण्यः कथं मानवैः ॥ ७ ॥

महिषासुरपुरभूपो
जयति जयत्येष कृष्णभूपालः ।
यशसा जितशशिकान्तिः
सुन्दररूपेण विजितमदनो यः ॥ ८ ॥

मैसूर्निवासि डाक्टर्
ए. आर्. वैद्येश्वरस्य सुतयेदम् ।
कृष्णमहीपस्तोत्रं
सज्जनमोदाय बालया रचितम् ॥

॥ संपूर्णम् ॥

**COMPOSED BY SISTER V. BALAMMAL,**

*Daughter of the late M.R.Ry. A. R. VAIDYANATHA SASTRIAR, M.A., M.B. & C.M., Assistant Surgeon, Mysore Service.*



# பத்மநாபன் அல்லது பணச்செருக்கு

### 1-வது அதிகாரம்.

சென்னை மாகாணத்தில் பன்முறை சட்ட சபைகளுக்கு எலெக்ஷன் நடந்திருந்தாலும் 1923ம் வருஷத்தில் நடந்த தேர்தல்மட்டும் மெத்த விசேஷம் வாய்த்ததாயிருந்தது. உண்மைத் தேசாபிமானிகளும் சுயநல வாதிகளும் சுயராஜ்ஜியக் கக்ஷியினரும் நான் முன்னே நான் முன்னே என்பதாகத் தேர்தலில் வெற்றி பெறப்போராடினார்கள். அச்சமயம் மகாஜனங்களிடையே யார் வெற்றியடைவார்கள் என்ற விவாதமேற்படும் பொழுதெல்லாம் சுயநல வாதிகளான பிரபுக்கள் சிலரே ஸ்தானம் பெறுவார்கள் என்ற தீர்மானம் நிலைத்திருந்தது. யார் இருந்தால் என்ன, இல்லாவிட்டால் என்ன? மோட்டார்காரும் காப்பி சிற்றுண்டியும் தாராளமாய்க் கிடைத்தால் ஓட்செய்வதில் தடை இல்லை என்று நினைக்கும் சிலர் ஆங்காங்கு இருப்பினும் தஞ்சை ஜில்லா வாசிகள் மட்டும் தக்கவர்களுக்கே ஓட்செய்ய வேண்டுமென்று உறுதியுடனிருந்தார்கள். மாகாண சட்டசபைக்குத் தஞ்சை ஜில்லாவின் பிரதிநிதியாகப் போட்டி போட்டவர்களில் நமது பத்மநாபனும் ஒருவர். வரி உயர்விலும் மறு பைசல் விஷயமாயும் தத்தளித்துக் கொண்டிருக்கும் இந்த ஜில்லாவில் சுபகாரியப் புலியான பத்மநாபனுக்கு ஒரு ஓட்டும் கிடைக்கப் போவதில்லை என்பது நிச்சயமானாலும் பத்மநாபன் தன் பணச் செருக்காலும் பக்கபலத்தாலும் தேர்தலில் வெற்றிபெற்று விடலாமென்று தீர்மானித்திருந்தார். பிரபுக்களின் பரிச்சயமும் உயர்தர அதிகாரிகளின் கிருபா கடாக்ஷமும் தோட்டக் கச்சேரிகளும் சிற்றுண்டி விருந்தும் பெரியவிடத்து அழைப்புப் பத்திரங்களும் எளிதில் கிடைக்குமாறு தஞ்சைவாசியாகிய பத்மநாபன் சென்னையிலேயே வசித்து வந்தார். அதிகாரிகள் தயவிருந்தால் தேர்தலில்லாமலே நியமனத்தில் ஸ்தானம் பெற்று விடலாமென்று பத்மநாபன் அறிந்திருந்தார். ஆனாலும் பணத்தைப் பக்குவமாய் வாரியிறைத்துத் தேர்தலில் வெற்றி பெற்றோமென்ற கௌரவ மடையும் பொருட்டு இச்சமயம் தாமும் ஒரு அபேக்ஷகராக முன்வந்தார். ஓட்டுக்கள் சேகரிக்கும் பொருட்டுத் தஞ்சை ஜில்லாவில் மோட்டார்காரிலேயே சுற்றுப் பிரயாணம் செய்யத் தீர்மானித்து அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து முடிக்கும்படி மனைவி நீலாம்பாளுக்குக் கட்டளையிட்டு "ராமு, ராமு" என்று பன்முறை யழைத்தார்.

நீலாம்பாள் :—ராமு இன்று காலையிலிருந்து இங்கு வரவே இல்லையே.

பத்மநாபன் :—அவனுக்கென்ன கேடுவந்து விட்டது. ராமு பெரிய சோம்பேரியாய் விட்டான். கர்வமும் அதிகமாயிருக்கிறது. தான் சீமான் வீட்டுப் பிள்ளை என்று நினைத்துக் கொண்டு இஷ்டப்படி நடக்கிறானாக்கும்.

நீலா :—அவன் தாய்க்கு அதைக் காட்டிலும் கர்வமதிகம். எந்த வேலையிட்டாலும் தனக்குச் செய்து வழக்கமில்லை என்கிறாளே. மூன்று நாளாய் என் புடவைகள் துவைக்காமல் கிடக்கின்றன.

மனைவி சொல்லை கேட்டதும் பத்மநாபனுக்கு அடக்காத கோபமுண்டாயிற்று. உடனே கைப்பிடியாய் ராமுவை இழுத்து வரும்படி வேலைக்காரனொருவனை அவன் வீட்டிற் கனுப்பினார்.

### 2-வது அதிகாரம்.

சோமசுந்தரம் என்பவர் தஞ்சை ஜில்லாவிலுள்ள பிரபல மிராசுதார்களில் முக்கியு

மானவர். ஏழைக் குடிமக்களின் ஸ்திதிகளை வட்டிக்கு ஈடுவாங்கி ஜப்தி செய்தே பெரும்பாலும் அவர் பூஸ்திதி சேகரித்தார். கருத்தட்டாங்குடியில் சோமசுந்தரம் தாய் தந்தையின்றித் திக்கற்று அனாதையாய்ச் சோற்றுக்குப் பறந்து கொண்டிருந்த சமயம் வேதமூர்த்தி என்ற கனவான் இவரைத் தன் வீட்டு வேலைக்காரனாய் அமர்த்திக்கொண்டார். பரோபகாரமும் ஜீவகாருண்ணியமுமே உருவாய்க் கொண்ட வேதமூர்த்திக்குச் சாந்தமும் நற்குணமும் நிரம்பிய வேதவல்லி என்ற உத்தமி பத்தினியாய் வாய்த்திருந்தாள். வேதமூர்த்தியின் வீட்டில் வேளை ஒன்றுக்கு நூறு ஜனங்கள் சாப்பிடாத நாளில்லை. இவர் கஞ்சித் தொட்டிகளும் அன்ன சத்திரங்களும் ஏற்படுத்தியும் மாணவர்களுக்குப் படிப்புச் செலவளித்தும் ஏழைகளுக்கு வஸ்திரதானம் செய்தும் வந்தார். இவ்வாறு சகல ஜனங்களும் மனமாரக் கொண்டாடி ஆசீர்வதிக்கக்கூடிய புண்ணியவானாகிய வேதமூர்த்திக்கு நெடுநாள் புத்திரபாக்கிய மில்லாமலிருந்தது. தன்னை வந்து அண்டிய சோமசுந்தரத்திற்குக் கல்வியறிவுண்டாக்கிச் சொந்தச் செலவில் கலியாணத்தையும் முடித்துவைத்துச் சில நாளில் இக்கனவான் அவரைத் தமது குடும்ப மானேஜராகவும் நியமித்து விட்டார். இதிலிருந்து சோமசுந்தரத்திற்குச் சுக்கிரதசை ஆரம்பமாய் விட்டது. லக்ஷ்மிக்குப் பாரபக்ஷமில்லை என்றும் நல்லோர் தீயோர் எல்லாரையும் சம திருஷ்டியுடன் நோக்குவாளென்றும் இருக்கும் வதந்தி உண்மையாவதற்குச் சோமசுந்தரத்தின் நிலைமையே காரணமாயிருந்தது. கொடிய மனதும் கடின நெஞ்சும்படைத்த சோமசுந்தரம் தன்னை ஆளாக்கிய வேதமூர்த்தியிடமே கொள்ளையடித்ததுடனில்லாமல் எஜமானனைச் சில வருஷங்களில் பெருத்த கடனாளியாகவும் செய்துவிட்டார். உத்தமியாகிய வேதவல்லியும் தன் கணவன் செய்யும் அபாரச் செலவுகளாலேயே பெருத்த கடன் ஏற்பட்டுவிட்டதாக எண்ணி அதனால் மனங்கலங்காது பர்த்தாவின் மனங் கோணாமல் நடப்பதிலேயே கண்ணுங்கருத்துமாயிருந்தாள். சோமசுந்தரத்தின் மகன் பத்மநாபன். இவருக்கு பத்து வயதானபோது வேதமூர்த்திக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அதற்கு ஜயராமனென்று நாமகரணம் செய்து மெத்த மேன்மையுடன் அத்தம்பதிகள் தமதிளஞ்செல்வத்தைப் போற்றி வளர்க்கலானார்கள். பெருத்த கடனில் குடும்பம் முழுகிவிட்டதால் முன்போல் தானதர்மங்களைச் செய்வதிற்கில்லையே என்ற துக்கம் வேதமூர்த்திக் குண்டாகும்போது ஜயராமனின் புன்சிரிப்பும் மழலைச் சொற்களும் அவருக்கு ஆதரவளித்து வந்தன. நிலபலங்களை விற்று வந்து கடன்களை அடைத்து விட்டுப் பாக்கி உள்ளதை வைத்துக்கொண்டு சுக ஜீவனம் செய்யலாமென்று வேதமூர்த்தி தைரியத்துடன் இருக்கையில் அவருக்குத் திடீரென்று தேக அசௌக்கிய மேற்பட்டது. நாளுக்கு நாள் நோய் அதிகரிப்பது கண்டு வேதமூர்த்திக்குத் தாம் பிழைத்தெழுவது கடினமெனத்தோன்றியது. அருகில் சதாகாலம் பணிவிடை செய்து கொண்டிருக்கும் வேதவல்லியை நோக்கி "நீ ஒன்றுமறியாத பேதை; உன்னுடைய அதிருஷ்டத்தினாலேயே இவ்வீடு இவ்வளவு தூரம் விளங்கியது; பர்த்தாவிற் கேற்ற பதிவிரதையான உன்னுடனும் அருமைக் கண்மணி ஜயராமனுடனும் சந்தோஷமாய் நெடுநாள் வாழ்வதற்கு நான் கொடுத்து வைக்கவில்லை. மனிதனுக்கு ஆறிலும் சாவு நூறிலும் சாவு தானே. என்பெருக்குக் குறைவின்றி நீ நடந்து கொண்டு குழந்தையையும் செம்மையாய் காப்பாற்றுவாயென்ற நம்பிக்கை எனக்குண்டு; விசனப்படாதே, தைரியமாயிரு" என்று புத்திமதி கூறினார். சோமசுந்தரத்தைக்



சமீபத்திலழைத்து "அப்பா, சோமு, உன் தாய்க்குச் சமானமாகிய வேதவல்லியையும், இக்குழந்தையையும் கவனித்துக்கொள். கடன்காரர்களுக்குச் சற்றும் துரோகமின்றி ஏற்பாடுகள் செய். இந்தா இவனைப்பிடி" என்று குழந்தை ஜயராமனைச் சோமு கையில் ஒப்புவித்தார். வைத்தியர்கள் பயமில்லை என்று சொல்லிக்கொண்டிருந்தும் நோயானது வேதமூர்த்தியை சீக்கிரத்தில் மரணத்திற் குட்படுத்தி விட்டது.

அதுமுதல் சோமு எஜமான் மனைவியிடம் மிக்க பயபக்தி உள்ளவர்போல் நடித்து உள்ளூறத் துரோகம் செய்யலானார். கணவன் பெயருக்குக் குறைவு வரக்கூடாதென்று பயந்து முழுச் சொத்துக்களையும் விக்கிரயம் செய்து கடனடைப்பதில் வேதவல்லி சோமசுந்தரம் சொற்படிக்கெல்லாம் பத்திரங்களில் கையெழுத்திட்டு விட்டாள். கடன் போக பாக்கி ஐம்பதினாயிரம் ரொக்கம் மீந்திருக்கவேண்டுமானாலும் நமது சோமசுந்தரத்தின் யுக்தியால் அறுபதினாயிரம் ரூபாய் கடன் பாக்கி ஏற்பட்டது. குடியிருப்பு வீட்டையும், நகைகள் வெள்ளிப் பாத்திரங்கள் இவைகள் எல்லாவற்றையும் விற்றுக் கடனடைத்தும் கூட ஐயாயிரம் பாக்கி நின்று விட்டதால் சோமசுந்தரம் கைப்பணத்தைப் போட்டுக் கடன்காரர் உபத்திரவத்தை நீக்கித் தனது பணத்திற்காக எஜமானியிடம் ஒரு பத்திரமும் எழுதிவாங்கிக்கொண்டார். வேதவல்லிக்குத் தனது கஷ்ட காலத்தில் தஞ்சையிலிருக்கப் பிடிக்கவில்லை. தனது மோசங்களை யாராவது வெளிப்படுத்தி விடுவார்களோ என்ற பயம் சோமசுந்தரத்திற்கு மிருந்ததால் ஜயராமன் பத்மநாபனுடன் படிக்கட்டுமென்று காரணங்கூறி சோமு வேதவல்லியையும் ஜயராமனையும் சென்னைக் கனுப்பிவிட்டார். கைபடக்கம் செய்திருந்த ரொக்கங்களை லேவாதேவி செய்து அநியாய வட்டிவாங்கிச் சிறிது நாளில்சோமு பெருத்த மிராசுதாரானார். பத்மநாபனுக்குக் கலியாணம் முடிந்து நீலாம்பாள் வீட்டிற்கு வருமுன் சோமசுந்தரமும் அவர் மனைவியும் காலமாய் விட்டதால் பத்மநாபன் தன் படிப்பை ஒருவாறு முடித்துக்கொண்டு மனைவியுடன் சுக புருஷராய்ச் சென்னையில் காலங் கழிக்கச் சௌகரியமாயிருந்தது. நீலாம்பாளின் போதனையால் வேதவல்லியைத் தனி வீட்டில் வைத்து, ஜயராமன்படிப்பை நிறுத்தி விட்டு அவனைத் தன் மோட்டார் ஓட்டுபவனாகப் பத்மநாபன் நியமித்துக்கொண்டார். ஜயராமனுக்குச் சம்பளம் ஐம்பது ரூபாயென்றேற்படுத்தித் தனக்கு வரவேண்டிய கடன் வட்டிக்கு நாற்பது ரூபாயைப் பிடித்துக்கொண்டு பாக்கிப் பத்து ரூபாயை நீலாம்பாள் அவனுக்குக் கொடுப்பாள். பாக்கி சேரவேண்டிய வட்டிப் பணம் பத்து ரூபாய்க்கு வேதவல்லி நீலாம்பாளுக்குப் புடவை துவைத்துத் தலை வாரிப் பின்னி எண்ணை தேய்த்து ஸ்நானம் செய்வித்து தயிர் கடைந்து வீட்டிற்கு வேண்டிய அப்பளம் வடகம் முதலியது தயாரித்துக் கொடுப்பாள். மாதம் பத்து ரூபாய் இருவர் சாப்பாட்டிற்கும் பற்றாமலிருந்ததால் தன் மகனுக்கு வயிர் பசிக்காது உணவளித்து வேதவல்லி ஏகாதசி கிருத்திகை சனிக்கிழமை பௌர்ணமை முதலிய விரதங்களுடன் மிகுந்த நாட்களை ஒருவேளை அல்பாகாரம் செய்து காலங்கழித்து வந்தாள். தன்னையும் தன் தாயையும் பத்மநாபன் பணச் செருக்கால் மிகவும் அவமதிப்பதையும் ஓயாது வேலையிட்டுக் கடுமையாக நடத்துவதையும் நினைத்து ஜயராமன் கண்ணீர்விடும் சமயங்களில் வேதவல்லி தன் மகனைத் தைரியப் படுத்திக் கஷ்டப்படுவது மனித ஜன்மத்திற்கு ஸகஜ மென்றும் அரிச்சந்திரன் கஷ்டப்பட்டது போல எப்படியாவது ஐயாயிரம் ரூபாய் கடனைப் பத்மநாபனுக்குத் திருப்பிக் கொடுக்க வழிதேடவேண்டுமென்றும் பலவாறு

எடுத்துரைத்துத் தேற்றுவாள். இவ்விதம் தாய் பிள்ளை இருவரையும் ஒப்பந்தக் கூலிகள் போல் பத்மநாபன் நடத்தி வந்தார்.

3-வது அதிகாரம்.

"எஜமானன் அவசரமா யழைக்கிறார்" என்று வேலைக்காரன் அழைத்ததும் ஐயராமன் தாமதமின்றிப் பத்மநாபன் வீடு வந்தான்.

பத்மநாபன் :—ஏன் நீ இன்று காலைமுதல் வரவில்லை? இன்று மாலை ஏழு மணிக்கு மோடாரில் தஞ்சை புறப்படவேண்டும். வண்டியைச் சுத்தப்படுத்திப் பிரயாணத்திற்குத் தயாராயிரு.

ஐயராமன் :—என் தாயார் மூன்று நாளாய் சுரத்தினால் கஷ்டப்படுகிறாள். இன்று காலையிலிருந்து உடம்பு அதிகமாயிருக்கிறது. நான் இல்லாவிட்டால் அவளுக்குக் கஞ்சி கொடுப்பாரு மில்லாமல் போய்விடும்.

பத்மநாபன் :—ஓகோ! சரிதான். சுரம்வந்தாலென்ன? உயிர் போய்விடுமோ. இரண்டு நாள் போனால் சரியாய் விடுகிறது.

ஐயராமன் :—இன்றைக்கும் நாளைக்குமாவது தயவு செய்து பொருத்துக்கொள்ளுங்கள். சற்று சுரம் தணிந்ததும் புறப்பட்டு விடுகிறேன்.

பத்மநாபன் :—எப்போதும் உங்கள் இழவுதானா? அப்பன் வைத்த ஐயாயிரம் ரூபாய் கடனைக் கொடுக்க உனக்கு வழியில்லை. என் வேலையை நீ சரியாய் செய்தால்தானே வட்டிக்காவது ஈடு செய்துகொள்ளலாம். இதற்கும் தப்பித்துக் கொண்டுவிடு என்று உன் தாய் போதித்திருக்கிறாள் போலும். எலெக்ஷன் தேதி கிட்டிவிட்டது. நீ இன்று புறப்படாவிடில் நாளைக்கே பத்திரத்தை கோர்ட்டில் போட்டு உன்னைக் கடன்காரர் ஜெயிலில் அடைத்துவிடுவேன். உன் கையெழுத்து இருக்கும்போது நீ எப்படித் தப்பித்துக் கொள்ளுகிறாய் பார்போம் உன் தாயையும் சாட்சி கூண்டில் ஏறச் செய்வேன்.

இவ்வார்த்தைகளைக் கேட்டதும் ஐயராமன் கண்களில் தன்னையறியாமல் கண்ணீர் மாலை மாலையாய் வழிந்தோடியது. துக்கம் நெஞ்சையடைத்தது. ஒன்றுந் தோன்றாது பித்தம் பிடித்தவன்போல் வீடு திரும்பினான்.

"அப்பா ஐயராமா ஏன் அழுகிறாய்? எனக்கொரு ஆபத்துமில்லையே. பச்சை ஜலத்தில் ஸ்நானம் செய்தது இக்குளிர்காலத்தில் ஒத்துக்கொள்ளவில்லை. நாளைப்பொழுது விடிந்தால் என் உடம்பு குணமாய்விடும். கவலைப்படாதே" என்று மெல்லிய குரலில் வேதவல்லி விளம்பினாள்.

ஐயராமன்:—அம்மா! எஜமான் இன்றுமாலை மோடாரில் தஞ்சை செல்லப் போகிறாராம். நான் பிரயாணத்திற்குச் சித்தமாகவேண்டுமாம்.

வேதவல்லி :—எனக்கு உடம்பு சரியில்லை என்று சொன்னாயா?

ஐயராமன் :—ஆம் சொன்னேன். அதற்குத் தாறுமாறாகப் பேசி இரைந்து நான் இன்று புறப்படாவிட்டால் பத்திரத்தை நாளைக்கே கோர்ட்டில் தாக்கல்செய்து, பணம் வாங்கியதற்கு உன்னையும் சாட்சியாகப் போட்டு என்னை ஜெயிலில் அடைப்பதாகக் கர்ச்சித்தார்.

வேதவல்லி :—சிவ, சிவ. நாடு புகழக்கூடிய பிரபுவை மாலையிட்டு மானத்திற்கஞ்சி கடன் துரோகம் கூடாதென்று ஒன்றுக்குப் பாதியாய் அளவற்ற சொத்துக்களை விற்றுவிட்டுச் சந்திர மதிபோல் காலங்கழிக்கும் என்னை சாக்ஷிக் கூண்டிலேற்றி கண்மணியாகிய உன்னை ஜெயிலிலடைப்பதாய் அவன் சொன்னானா? உண்ணச் சோறின்றித் திரிந்த இவன் தகப்பனை நாங்கள் வீட்டில் வைத்துக் குழந்தைபோல் காப்பாற்றிக் குடும்ப அதிகாரமெல்லாம் கொடுத்து



ஆதரித்ததற்கு இது பிரதி உபகாரமா? இந்தப் பத்மநாபன் படிக்கும்போது என் கையால் சமைத்துப் போட்டேனே. இவன் பெண்டாட்டிக்கு நான் சேலை துவைத்துப் போட்டாவது நன்றித்துரோகம் கூடாதென்றுதானே பாடுபடுகிறேன். இவன் இவ்வளவு நன்றி கெட்டவனா?

ஐயராமன் :—இவன் பணத்தைத் திருப்பிக் கொடுக்க வழி இருக்குமானால் உன்னை நான் இவ்வளவு கஷ்ட ஸ்திதியில் வைத்திருக்கமாட்டேனே. நான் ஒன்றுக்கு முதவியற்ற பிள்ளையாய்ப் பிறந்து தகப்பனையும் வாயில் போட்டுக்கொண்டு விட்டேனே. இதற்கேதேனும் ஒரு வழி இல்லையா? ஐயோ தெய்வமே! நான் இப்படி மானங்கெட்டுக் காலங்கழிக்கவோ பிள்ளை பிறந்தேன்.

வேதவல்லி:—அப்பா ராமு, பயப்படாதே. ஈசுவராதிகளெல்லாம் கஷ்டப்பட்டிருப்பதாய் நாம் புராணங்களில் படிக்கவில்லையா? நான் செய்த துர்ப்பாக்கியத்தால் என் வயிற்றில் பிறந்த நீ கஷ்டப்படுகிறாய். நீ இப்போது எஜமானன் வீடு சென்றிருந்த சமயம் அடுத்த வீட்டு ருக்மணி புருஷன் இங்கு வந்து எனக்கு மருந்து கொடுத்தார். திருச்சிக்கும் விழுப்புரத்திற்கும் அரியலூர் பாதையாய் ரயில் போடப் போவதாய் அவர் பேச்சுவாக்கில் சொன்னார். எனக்கு இப்பொழுதுதான் ஒரு விஷயம் ஞாபகம் வருகிறது. அரியலூர் சமீபத்தில் நூறு ஏகரா நிலத்தை உன் தகப்பனார் தர்காஸ்து எடுத்திருந்தார். அச்சமயம் அது தம்படிக்கு முதவாத நிலைமையிலிருந்ததால் விற்கப்படவுமில்லை. சோமசுந்தரம் அதை ஈடு கேட்கவுமில்லை. ஒருகால் ரயில்பாதை அவ்வழி போமானால் உனக்கு நல்ல லாபங் கிடைக்கும். பத்மநாபன் கடனையும் அடைக்கலாம். நீ தஞ்சை சென்றால் அது விஷயம் நன்றாய் விசாரித்து வரலாம். வேலையைவிட்டு நீ தனியாய்ப் போக முடியாது. ஆகையால் இன்று பத்மநாபனுடன் சென்று அவ்விஷயத்தையும் விசாரித்துவா. இதுவும் ஒரு நன்மைக்கே.

ஐயராமன்:—அம்மா, நீ இப்படிச் சுரமாய்ப் படுத்திருக்கும்போது நான் எப்படிச் செல்வேன்?

வேதவல்லி :—அதெல்லாம் சரியாய்விடும். அடுத்தவீட்டு ருக்மணி என்னைப் பார்த்துக் கொள்வாள். நாழியாய்விட்டது. நீ சீக்கிரம் சாப்பிட்டுவிட்டுப் புறப்படப்பா.

4-வது அதிகாரம்.

சுமார் இரவு மணி எட்டிருக்கும். சென்னையிலிருந்து திருச்சி செல்லும் சாலையில் ஒரு மோடார் அதிவேகத்துடன் ஓடிக்கொண்டிருக்கிறது. அதில் சுமார் முப்பத்திரண்டு வயதுள்ள கனவான் ஒருவர் உட்கார்ந்திருக்கிறார். வண்டிக்குள் கட்டிய படுக்கையும் பெட்டியும் வைத்திருக்கின்றன. கார் ஓட்டுபவனுக்கு இருபத்திரண்டு வயதிருக்கலாம். கவலையும் துக்கமும் உருவாய்க் கொண்ட இவனும் அகம்பாவமே உருவாய்க் கொண்டு வீற்றிருக்கும் அக்கனவானும் யார்? நமது ஐயராமனும் பத்மநாபனுமே. எலெக்ஷனில் எப்படி ஜயிப்பது? அதற்கு என்னென்ன உபாயங்கள் தேட வேண்டும் என்றிவ்விதமெல்லாம் பத்மநாபன் யோசித்த வண்ணமிருந்தார். எலெக்ஷனுக்குத் தாமும் ஒரு அபேக்ஷகராயிருப்பதாக வெளியிட்ட சமயம் அவருக்கிருந்த உற்சாகமிப்பொழுதில்லை. பரிதானம் பெற்ற சிலர் பத்மநாபனைப் பற்றிப் புகழ்ச்சியாகப் பேசி ஓட்டு சேகரிக்கத் திரிந்தாலும் "இவர் யார்" என்றே அச்சில்லர வாசிகள் கேட்கிறார்களன்றிச் சென்னையில் சுயநலவாதியாய் வசிக்கும் பத்மநாபனை அங்குள்ளவர்கள் தெரிந்து கொள்ள நியாயமே இல்லை. சில பிரபல மனிதர்களை நேரில்கண்டு இரண்டொரு விருந்து

190368

களை நடத்தினால் சௌகரியமென்று எஜண்டு எழுதியதை உத்தேசித்து உடனே புறப்பட்டு விட்டார். பத்மநாபனைப் பற்றி நாம் சிந்திப்பானேன். எலெக்ஷனில் தோற்பது நிச்சயமானாலும் நியமனத்தில் ஒரு ஸ்தானமடையப் போவது உண்மை! பரிதாபகரமான நிலைமையிலிருக்கும் ஜயராமனைக் கவனிப்போம். தாய் என்ன செய்கிறாளோ; உடம்பு எப்படியிருக்கிறதோ; அடுத்த வீட்டு ருக்மணி வந்திருப்பாளோ; அடுப்பில் வைத்துவந்த தீர்த்தம் ஆறி விட்டிருக்குமோ; அதை எடுத்துக் கொடுக்கவும் திக்கில்லையே; தாகத்தால் வாய் திறந்து பேசவும் முடியாது சிரமப்படுவாளோ; ஜலபாதைக்கெழுந்து செல்லும்பொழுது ஒரு கால் வழியில் தவறி விழுந்து விட்டால் என்ன செய்கிறது: நான் ஏன் புறப்பட்டு வந்தேன்; வந்தது வரட்டுமென்று தாயின் சமீபத்திலிராமல் போய் விட்டேனே. தாயை உயிருடன் இனிக் காண்பேனா? திரும்பிச் சென்னை போக எவ்வளவு நாள் பிடிக்குமோ? என்றிவ்வாறெல்லாம் எண்ணமிட்டுக்கொண்டே ஜயராமன் வண்டி ஓட்டுகிறான். இரவில் தங்கவேண்டிய இடம் நூறு மைல் இருக்கிறது. வழியோ புதிது. மேடு பள்ளங்களதிகம். இரவு பதினொரு மணிக்குள் குறித்தவிடம் செல்லாவிடில் திருடர் கையில் அகப்படுவது நிச்சயம். எலெக்ஷன் செலவுகளுக்காக நோட்டுக்களாகவும் ரூபாய்களாகவும் எஜமான் இருபதினாயிரம் ரொக்கமாகக் கையில் கொண்டு வருகிறார். எலெக்ஷனில் பணச் செலவு செய்யக் கூடாதென்று கடுமையான விதி ஏற்பட்டிருப்பதால் தபால் மூலம் பணம் வரவழைத்துக் கொள்ளல் சந்தேகத்திற்கிடமுண்டாகுமென்று பத்மநாபன் பணத்தை கையிலேயே கொண்டு வந்து விட்டார். வண்டி சற்று மெதுவாய் சென்றால் அவருக்குக் கோபம் வருகிறது. இவ்வித நிலைமையில் ஜயராமன் வண்டியைச் செலுத்திச் செல்லுகிறான். பத்மநாபன் கடியாரத்தைப்பார்த்த வண்ணம் "ஓட்டு ஓட்டு, மணி பத்தடிக்கப் போகிறது" என்று விரட்டுகிறார். இச்சமயம் திடீரென்று வண்டியைக் குறுக்கிட்டுத் தன் தாய் வழியில் ஏதோ கேட்பது போல ஜயராமனுக்குத் தோன்றியது. அவன் சற்று திகைத்து விட்டு இது தன் மனக்கலக்கத்தால் ஏற்பட்ட தோற்றமென்று எண்ணி மீண்டும் வண்டியைச் செலுத்தினான். மீண்டும் "அப்பா, தாகத்திற்குத் தீர்த்தம் வேண்டும். என் உயிர் போகிறது" என்று சொல்வது போல் அவனுக்கு தோன்றிற்று. ஜயராமன் நடுநடுங்கினான்.

உற்றுப் பார்க்கும் பொழுது வெட்ட வெளியும் நிலவு வெளிச்சமுமே காணப்பட்டன. இச்சமயம் வண்டி சற்றுமெதுவாக விடப்படுவது கண்டு பத்மநாபன் ஜயராமனை வாய்க்கு வந்தபடியெல்லாந் திட்டினார். "திருடர்களிடம் என்னைக் காட்டிக்கொடுத்து விட்டு பணத்தை கொள்ளையிடவா பார்க்கிறாய்" என்று அதட்டினார். தலைவிதியை நினைத்துக் கொண்டு மீண்டும் வண்டியை வெகு வேகமாக ராமு ஓட்டினான். அப்பொழுது மணி ஒன்றுக்கு 60 மைல் வேகம் வண்டி ஓடிக்கொண்டிருந்தது. இருகைகளையும் உயரத்தூக்கி "ராமு, வண்டியை நிறுத்து, மேலே ஓட்டாதே! அபாயம்! அபாயம்!" என்று தன் தாய் வண்டிக்கு முன் பாதையைக் குறுக்கிட்டு நின்று அலறுவது போலிருந்ததால் ஜயராமன் வண்டியை நிறுத்திவிட்டு கலவரத்தால் மூர்ச்சையடைந்தான். "நாயே, கழுதை, போக்கிரி, திருடா" என்று சரமாரியாய் ராமுவை வைது கொண்டு பத்மநாபன் வண்டியை விட்டுக் கீழிறங்கி முன்பக்கம் வந்தார். ஜயராமன் மூர்ச்சித்திருப்பதைப்பார்த்தார். கூஜாவில் ஜலமில்லாததால் சிறிது ஜலம் கிடைக்குமாவென்று சாலையில் பத்தடி நடந்தார். முப்பது



கஜ தூரத்தில் பாதைக்குக் குறுக்காகக் காட்டாறு வெள்ளம் பெருகிப் பாலத்தை அடியோடு அடித்துக் கொண்டு போயிருப்பதைக் கண்டார். வண்டி நிறுத்தப்படாமல் நேரே வந்திருந்தால் தாம் வண்டியுடன் கூண்டோடு கைலாசம் செல்ல நேர்ந்திருக்குமென்பதை நினைத்ததும் அவருக்கு நெஞ்சும் மார்பும் படீர் படீரென்று அடித்துக் கொண்டன. ஒருவாறு சமாதானமடைந்து ஜலத்துடன் வண்டியிருக்குமிடம் வந்து ஜயராமன் மூர்ச்சையைத் தெளிவித்தார். நேரவிருந்த அபாயத்தையவனிடம் கூறாமல் சென்னைக்கு வண்டியைத் திருப்பும்படி கட்டளையிட்டார். தாயின் முகத்தைக் காணலாமென்ற சந்தோஷத்தால் மற்றொன்றையும் கவனிக்காமல் ஜயராமன் வண்டியைத் திருப்பிச் சென்னை மார்க்கமாக வந்து கொண்டிருந்தான். நிலவு வெளிச்சத்தில் ரயில் பாதையும் சிறிய ஸ்டேஷன் ஒன்றும் இருப்பதாகத் தெரிவதைக்கண்ட பத்மநாபன் அவ்விடத்திற்கு வண்டி விடக்கூடிய வழிப்பாதையிருக்கிறதா வென்று ஜயராமனைப் பார்க்கச் சொன்னார். வண்டிப்பாதை ரயிலடிக்கு இருந்ததால் மோட்டாரை ஸ்டேஷனுக்கு விடச் செய்து பத்மநாபன் சாமான்களுடன் கீழிறங்கித் தாம் ரயில் பாதையில் தஞ்சை செல்வதாகக் கூறி வண்டியுடன் சென்னை செல்லும்படிக்கு ஜயராமனை அனுப்பிவிட்டார். எஜமானன் வீட்டிற்கு வண்டி வந்து சேரும் பொழுது இரவு மூன்று மணி யடித்தது. கேட்டைத் திறக்கச்செய்து வண்டியை ஷெட்டில் நிறுத்திவிட்டு ராமு திரும்புமுன் நீலாம்பாள் விழித்தெழுந்து "என்ன விசேஷம்? வண்டி ஏன் வந்து விட்டது? எஜமானர் எங்கே?" என்றிவ்வாறு கேட்ட கேள்விகளுக்கெல்லாம் பதில் கூறி உத்திரவு பெற்று வீட்டை நோக்கி ஜயராமன் ஓடி வரும்பொழுது காலை ஐந்து மணியாயிற்று. தாய்க்கு உடம்பு எப்படியோ, உயிருடனிருப்பாளோ. வழியில் பல அபசகுனங்களாயிற்றே. இடது தோளும் கண்ணும் துடிக்கின்றனவே. வயற்றிலுண்டாகும் சங்கடம் சகிக்கக் கூடியதாயில்லையே. என்ன சமாச்சாரமோ என்று ஜயராமன் பலவாறு எண்ணி எண்ணிக் கண்ணீர் விட்டவண்ணம் தெருக் கோடியில் வரும்போது தன் வீட்டுத் திண்ணையில் கூட்டமாயிருப்பதைக் கண்டு ஏதோ அபாயமென்று ஓடிவந்தான். தெருவாயிற்படி வந்ததும் "அப்பா ராமு, கொஞ்ச நேரத்திற்கு முந்தி வந்திருந்தால் அம்மாளை உயிரோடு கண்டிருக்கலாமே" என்று ருக்மணி அலறினாள். இது கேட்டதும் இரவு முழுதும் கண் விழித்து மனவேதனைப்பட்டுக் கவலையுடனும் ஏக்கத்துடனும் வந்திருக்கும் ஜயராமனுக்கு மூளை கலங்கி விட்டது. "அம்மா செத்து விட்டாளா. ஓ! ஓ!!" என்று பல்லைக் காட்டிக் குதித்து எழுந்து ஒருவர் கைக்கு மகப்படாமல் மனம் போனபடி தெருவில் ஓட்டமெடுத்தான்.

என்ன பரிதாபம்! ஐயோ ஈதென்ன அநியாயம்! ஆகா, தர்மவானாகிய வேதமூர்த்தியின் குடும்பம் இவ்விதம் நிலைகுலைந்து போகச் செய்வது தெய்வத்திற்கடுக்குமா? தர்மம் தலைகாக்குமென்று சொல்லுகிறார்களே. அம்மா வேதவல்லி, மரணத்தருவாயில் தாகத்திற்குத் தண்ணீர் கொடுப்பாரற்று தவிக்க நேர்ந்ததும் உன் தலைவிதியோ. மரண சமயத்தில் உன் மனதில் என்னென்ன எண்ணங்கள் தோன்றினவோ. குழந்தை ஜயராமன் அருகில் இல்லையே என்று கலங்கினாயோ; அகண்ட ஐசுவரியத்தில் அளவற்ற போகத்தில் ஸ்ரீமானாகிய கணவனுடன் வாழ்ந்திருந்த நீ இப்பொழுது ஏழைபோல் அனாதையாய்க் குடிசை வீட்டில் தரையில் படுத்துக் கிடக்கிறாயே. கணவனே தெய்வமென்று காலங் கழித்த கற்பரசியாகிய உன்னிடம் கடவுளுக்குக் கருணை யில்லையோ; பத்மநாபன் கடனை

எப்படியாவது தீர்த்து விட்டுப் பிறர் அவமதிப்பின்றி தாயும் பிள்ளையும் கண்ணியமாய் காலங் கழித்தால் போதுமென்றெண்ணி யிருந்தாயே. மானத்தைக்காட்டிலும் பிராணன் பெரிதல்லவென்று பட்டினி கிடந்து காலங்கழித்தாயே. ஜயராமனைப் பார்க்கவேண்டுமென்ற எண்ணத்தால் உன் மனம் என்னபாடுபட்டதோ. நான் கஷ்டப்பட்டாலும் என் குழந்தை என்றைக்காவது நல்ல நிலைமையில் இருப்பானென்று அடிக்கடி கூறுவாயே. கண்மணி ஜயராமனை விட்டு உன் உயிர் எவ்வாறு நீங்கியதோ. அப்பா! ஜயராமா சுரத்துடனிருக்கும் தாயைத் தனியே விட்டுச் செல்ல நேரிட்டதே என்று அலறினாயே; உன் நெஞ்சிலுள்ள துக்கங்களை வாய்விட்டுச் சொல்லி அழுது உன் தாயை அடக்கம் செய்யாது உனக்குப் புத்தி கலங்கி விட வேண்டுமோ. பட்ட காலிலே படும் கெட்டகுடியே கெடும் என்ற பழமொழி உன் விஷயத்தில்தானா மெய்யாக வேண்டும். அம்மாள் செத்துவிட்டாளா ஹீ ஹீ என்று சிரிக்கிறாயே. இன்ன செய்கிறோம், இன்ன விடத்திற்குப் போகிறோமென்பதில்லாமல் பைத்தியக்காரனாப் இஷ்டப்படி ஓடுகிறாயே. உன் அருமைத் தாய்க்கு சவச்சடங்குகள் செய்யவேண்டாமா? ஐயோ தெய்வமே! அநியாயக்காரர்களை வாழவைப்பதும் நல்லவர்களை முழுதும் சோதிப்பதும் உனக்கு விளையாட்டாயிருக்கிறதோ; கலி காலத்தில் தர்மத்திற்கு உயர்வில்லையோ; இனி அநியாயம் தான் தலையெடுக்குமோ; பாவம் செழித்துப் புண்ணியம் மடிவதுதான் கலி காலத்திய அடையாளமோ. ஈசா! ஈதெல்லாம் உனது திருவிளையாடல் போலும்!

# நோயாளியை உபசரித்தல்.

இப்பூவுலகில் எம்மதத்தினராயினும் 'வரும் வினை வந்தே தீரும்' என்ற பழமொழியை நம்பாதவர்கள் கிடையவே கிடையாது. பெரும் கஷ்டமோ, எதிர்பாராத நஷ்டமோ, கொடிய வியாதியோ சம்பவித்து விடில் 'ஈச்வர சங்கல்பம்,' 'தலை விதி' 'வினைப் பயன்' என்று சொல்கிறார்களே யல்லாது, மதியீனத்தினால் வந்த கஷ்டம், புத்தி மோசத்தினால் விளைந்த நஷ்டம், அஜாக்கிரதையால் ஏற்பட்ட வியாதி என்று ஒப்புக்கொள்ளுவார் யாருமில்லை. பெரும் கஷ்ட நஷ்டங்களுக்காளாகிய ஒருவன் தன் மனம் தேறுதலடையும்பொருட்டுத் தனது ஆப்த சிநேகிதனிடம் தன் குறைகளை முறையிட்டால், "மேற்படி கஷ்ட நஷ்டங்களேற்படக் கூடுமென்று முன்னதாகவே எதிர்பார்த்திருந்தால் இக்கதி உனக்கு வந்திருக்காது" என்று பதிலளிப்பான். ஆனால் அச்சிநேகிதனுக்கே அத்தகைய ஸ்திதி வந்துவிடில் வேளைப் பிசகு என்பானே யன்றி, முன் தன் தோழனுக்கு எடுத்துச் சொன்ன உபதேசத்தை முற்றிலும் மறந்து விடுவான்.

கஷ்ட நஷ்டங்களை ஈச்வர சங்கல்பமென்பது போல் நோய் வந்துவிடின் அது தலை விதி என்று சொல்லவே முடியாது. "தலை விதி" என்பதை முழுதும் நம்பும் நம் வீட்டுப் பாட்டிமார்கள் கூட, வீட்டில் நோய் கண்டால், "வேளா வேளைக்குச் சாப்பிடுகிறதில்லை; தலைக்கு எண்ணெய் வைத்து எத்தனை நாளாயிற்று; எண்ணெய் தேய்த்துக்கொள்ள சோம்பற்பட்டால் என்ன செய்கிறது, உடம்பைப் பார்த்துக் கொள்ளத் தெரியாமல் வெயிலிலும் காற்றிலும் அலைந்தால் உடம்பிற்கு வாராமல் என்ன செய்யும்" என்று சொல்லுகிறார்களே ஒழிய, வேளைப் பிசகு என்பதில்லை. வைத்தியரும் எவ்வியாதிக்கும் 'அஜாக்கிரதை, அபத்தியம்,' என்றுதான் காரணம் கூறுகிறார். ஆகை



யால், ஒவ்வொருவரும் முன் ஜாக்கிரதையுடனிருந்தால் நோய் வாய்ப்படாமலிருக்கலாமாயினும், தற்காலத்தில் பொருளிட்டலையும் படிப்பையும் அந்தஸ்தையும் உத்தேசித்துத் தோட்டி முதல் தொண்டமான்வரை ஆரோக்கியமுள்ள கிராம வாஸத்தைக் கைவிட்டுப் பல கொடிய வியாதிகள் குடிகொண்டிருக்கும் நரகத்திற் கொப்பான நகர வாழ்க்கையைக் கைக்கொள்ளல் சகஜமாயிருப்பதால், தற்போது நோயாளிகளைத் தக்கபடி உபசரித்து, அணுகிய நோய் பரவாமல் சீக்கிரம் அகலும் முறையைச் சகலரும் தெரிந்து கொள்வதே முதன்மையான அவசியமாகும்.

ஒவ்வொரு வீட்டிலும் நோயாளிகளை கவனிக்க ஸ்திரீகளே தக்கவர்கள். வீட்டுப் புருஷர்கள் வைத்தியனை அழைக்கவோ, மருந்துகளை வாங்கி வரவும் உதவுவார்களேயன்றிப் பொறுமையும் சாந்தமும் அத்தியாவசியமான 'நோயாளியை உபசரித்தல்' என்ற பொறுப்பான விஷயத்திற்குக் கொஞ்சமும் தகுதியற்றவர்கள். ஆதலால் ஒரு வீட்டில் ஒருவருக்கு நோய் கண்டால், சீக்கிரம் குணமடையவேண்டுமே என்று விசாரப்படுதலும், அவர்களிடத்து நாம் வைத்திருக்கும் அன்பும் மாத்திரம் போதாது; நல்ல ஔஷதங்கள் கூட இரண்டாவது பக்ஷந்தான். அத்தியாவசியமானது நோயாளியைச் சரியானபடி உபசரித்தலே (Nursing) யாகையால் நம் வீட்டுப் பெண்மக்கள் அவ்விஷயமாகக் கீழ்கண்ட விதிகளை அனுசரிப்பார்களேயானால் அணுகிய நோய் சீக்கிரம் விலகி விடுமென்பது திண்ணம்.

1. திடீரென்று நோய் கண்டால், நோயின் காரணம் கொஞ்சமும் சந்தேகத்திற்கு இடமில்லாமலிருந்தாலொழிய இதுவாக இருக்கலாம், அதுவாக இருக்கலாமென்ற தப்பு அனுமானங்களை வைத்துக்கொண்டு, வைத்தியனைக் கூப்பிடாமல் நாமாக ஒரு ஔஷதம் கொடுத்தலோ, சிகிச்சை செய்தலோ கூடாது.

"எந்நேரமும் பல பிரபல வைத்தியர்களால் சூழப்பட்டிருக்கும் அரசர்களுக்கும் பிரபுக்களுக்கும் மரணம் சம்பவிக்க வில்லையா; வைத்தியனையே கூப்பிடாமல் தப்பும் தவறுமாகக் கண்ட மருந்துகளை உபயோகித்தும் ஏழை ஜனங்கள் பிழைத்து விடுகிறதில்லையா! ஆகையால் வைத்தியத்தில் என்ன இருக்கிறது, ஆயுள் வலுத்திருந்தால் விஷமும் பால்தான்; அல்பாயுள் ஜாதகத்திற்குப் பாலும் நஞ்சுதான்" என்று சிலர் சொல்லலாம். ஆயுள் தலைவிதிப்படி தான் என்று இருப்பினும் பலிக்குமிடத்தில், 'சீக்கிரம் குணமடைந்தது' என்ற சந்தோஷத்தையும், பலிக்காத விடத்தில் 'நம்மாலியன்றதைச் செய்தோம்' என்ற மன விச்ராந்தியையும் கொடுக்கக்கூடியது தகுந்த வைத்தியமே. காரணம் தெளிவாகப் புலப்படாத ஒரு தேக உபத்திரவத்தை ஒரு தப்பு அநுமானத்தை வைத்துக் கொண்டு நாமாகவே கண்டபடி பரிகாரம் செய்யப்போய் அதனால் பல விபரீதங்கள் ஏற்பட்ட பின்பு வைத்தியனை அழைத்து வந்து ஒன்றுக்கு நான்கு செலவு செய்து நோயாளியையும் பல பாதைகளுக்குட் படுத்தி நாமும் தேக சிரமத்தினாலும் மனோ விசாரத்தினாலும் அவஸ்தைப்படுவதை விட முன்னதாகவே வைத்தியருதவியைத் தேடுவதால், அற்ப உபத்திரவமாயிருப்பின் உடனே பரிகார மேற்படுகிறது; கொடிய நோயானால் அது தேகத்தில் ஊன்றுமுன்னம் சிகிச்சை செய்து வியாதியைக் கண்டிப்பது வைத்தியருக்கு எளிது; நோயாளிக்கும் நன்மை; குடும்பத்திற்கும் லாபம். வெள்ளம் வருமுன்னம் எளிதாகப் போடக்கூடிய ஒரு அணையை அசட்டையாய் சும்மாயிருந்து விட்டு வெள்ளம்வந்த பின்பு போட ஆரம்பிப்பதுபோல் எளிதில் குணமடையக் கூடிய வியாதியை உடம்பில் வளரவிட்டுப் பின்பு வைத்தியனை பழிக்காளாக்குவதும், கடவுளை நிந்திப்பதும், தலை விதியை நோவதும் ஆகும். ஆகையால் வைத்தியரை யழைக்கும் விஷயத்தில் சற்றும் தாமதமின்றி இருத்தல் முக்கியமாகும்.

(தொடரும்.)

வி. சிவராஜன்.

## புதுக்கோட்டை சமஸ்தானம்.

புதுக் கோட்டை சென்னை கவர்ன்மெண்டின் மேற்பார்வைக்குட்பட்டிருக்கும் ஐந்து பிரதான சுதேச சமஸ்தானங்களில் மூன்றாவதாகும். 1178 சதுர மைல் விஸ்தீரணமும் 417886 ஜனசங்கியையும் கொண்டுள்ளது. புதுக்கோட்டையை ஆண்டுவரும் அரசர்களுக்குத் தொண்டமான் என்ற பெயர் வழங்குகிறது. அத்துடன் பிருகதம்பாதாஸன் என்ற மொழியும் பெயருக்கு முன்னால் காணப்படுகிறது. சமஸ்தானத்திற்குத் தலை நகரம் புதுக்கோட்டை. இவ்விடத்திலேயே அரச குடும்பம் வசிப்பதற்கான அரண்மனைகள் இருக்கின்றன. இச்சமஸ்தானத்தில் மூன்று தாலூக்காக்களும் 439 கிராமங்களும் இருக்கின்றன. இங்கு வழங்கும் பாஷை பெரும்பாலும் தமிழ்தான். தேக்கு தவிர்த்து மற்ற உபயோகமுள்ள மரங்கள் அடர்ந்த காடுகள் அதிகம். காலாந்தரத்திலும் இக்காடுகள் அழியா வண்ணம் சுமார் நாற்பது வருஷங்களாகவே சவுக்குத் தோட்டங்கள் தர்பாரில் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. இதற்குச் சமீபக் கடலோரம் பன்னிரண்டு மைல் தூரத்தில் இருக்கிறது. ஜனகணிதிகளைக் கவனித்தால் நாளுக்கு நாள் ஜனங்கள் அபிவிருத்தியாய்க்கொண்டிருக்கிறார்கள் என்று விளங்குகிறது. இச்சமஸ்தானத்தின் முக்கியத் தொழில்கள் விவசாயம், கால் நடைகளை விருத்தி செய்தல், நூல் நூற்றல், நெசவு செய்தல், சித்திரவேலைகள் செய்தல், உலோகங்களில் நகாசு வேலைகள், சிற்பம், நகை வியாபாரம், வளையல் செய்தல், கயிறு திரித்தல் இவைகளாகும். புதுக்கோட்டை அழகிய ஒரு சிறு சமஸ்தானம். தலை நகரின் அமைப்பு மனோக்கியமாக இருக்கிறது. அகலமான சுத்தமாயுள்ள சாலைகளும் அணி அணியாய் வீடுகளும் பார்வைக்கு வெகு ரமணீயமாயிருக்கும். அவசியமான நாகரிக வழக்கங்களையனுசரித்த அமைதியான கிராம வாழ்க்கையை இங்கு காணலாம். விலைவாசிகள் கடுமையாயில்லை. அடுப்பிற்குபயோகமான விறகு மெத்த மலிவு. ஸ்னானத்திற்கென்றும் குடி தண்ணீர்க்கென்றும் தனித் தனியாகக் குளங்கள் படிக்கட்டுகளுடன் அமைக்கப்பட்டுத் தக்கபடி காவல் காக்கப்பட்டும் வருகின்றன. காலை மாலைகளில் பெண்மணிகள் இடுப்பில் செப்புக் குடங்களை வைத்துக்கொண்டு பத்திபத்தியாய் செல்வது நமது பூர்வீக வாழ்க்கையை ஞாபகப்படுத்துகிறது. நகர ஜனங்கள் தங்களுக்குள்ளதைக் கொண்டு திருப்தியாய் வாழ்ந்து வருகிறார்கள். இவ்விடத்தில் வெள்ளிக்கிழமை விடுமுறை நாள். தற்சமயம் நகரில் ஆங்காங்கு குழாய்கள் வைக்கப்பட்டு வருகின்றன. ஜனங்களுக் குபயோகமாக மகாராஜாவின் பெயராலும் மகாராணி பெயராலும் ஆண் பெண் இருபாலருக்கும் தனித்தனியே பெரிய வைத்திய சாலை இருக்கிறது. புதுக்கோட்டைக்குத் தஞ்சையிலிருந்தும் செல்லலாமானாலும் பிரயாணிகள் விசேஷமாய்த் திருச்சியிலிருந்தே செல்லுகிறார்கள். ஏனெனில், திருச்சியிலிருந்து சுமார் ஏழாவது மைலில் புதுக்கோட்டை எல்லை ஆரம்பமாகிறது. திருச்சி எல்லை வரை மேட்டிலும் பள்ளத்திலும் தலைவிரி கோலமாக ஆடிக்கொண்டு செல்லும் சர்வீஸ் மோடார்கள் புதுக்கோட்டை எல்லையைப் பிரவேசித்ததும் சற்றும் மேடுபள்ள மின்றி சமமாக இருக்கும் அவ்வழகிய பாதையில் அசைவின்றிச் செல்லவாரம்பிக்கும். இதனால் மோடார் பிரயாணத்தில் புதுக்கோட்டை எல்லை சமீபமாயிருக்கும் சௌகரியத்தை உத்தேசித்துத் திருச்சியிலிருந்தே பிரயாணிகள் புறப்படுவார்கள். மோடார் ஸர்வீசுக்குத் தனியாகச் சாலை



யமைக்கப் பட்டிருக்கிறதும் சிலாகிக்கத் தக்கதே. புதுக்கோட்டை சமஸ்தானத்தில் சிறப்பாக நடைபெறும் பல தர்மங்களைப் பற்றி மறுமுறை கவனிப்போம். புதுக்கோட்டை தர்பாரைப் பற்றி அனைவரும் புகழ்ந்து கொண்டாடக் கூடிய விதமாய்ப் பெண்களுக்கு அங்கு சுதந்திர மளிக்கப்பட்டிருக்கிறது. மேனாட்டில் நூற்றுக் கணக்கான வருஷங்களாகப் பெண் சுதந்திரப் போராட்டம் நடைபெற்றது. இந்தியாவில் மாண்ட்போர்ட் சீர்திருத்தம் வெளியான காலத்திலும் பெண்களுக்குச் சுதந்திர மளிக்கப்பட வில்லை. ஒருவாறு பெண்கள் ஓட் செய்யலாமென்று ஏற்பட்டும் நமது சென்னை சட்டசபையிலுள்ள பிரதிநிதிகள் பெண்களும் சட்டசபைக்கு அபேக்ஷகராகலாமென்று ஒரு தீர்மானம் கொண்டு வருவதற்குத் தயங்கி மயங்கித் தத்தளித்துத் தடுமாறிக் காலங் கழிக்கின்றனர். ஆரம்பமாகவும் பரீக்ஷார்த்தமாகவும் ஏற்பட்டிருக்கும் சீர்திருத்தத்திலேயே பெண்களும் சட்டசபைகளில் ஸ்தானம் வகிக்கலாமென்று புதுக்கோட்டை தர்பார் சுதந்திரமளித்திருக்கிறது.

தற்சமயம் எவ்விதமிருந்தாலும் ஒரு கால் பெண்மணிகள் தேசகாரியத்தில் சிரத்தையெடுக்கமுன் வருவார்களானால் அதற்குச் சட்டசபையையும் அதிலுள்ள அங்கத்தினர்களையும் எதிர்பார்த்து, வாதப் பிரதிவாதங்களுக்கிடையே பெண் சுதந்திரத்தைப் பிச்சை கேட்கும்படியான தாழ்ந்த நிலை ஏற்படாவண்ணம் புதுக்கோட்டை தர்பார் எக்காரியத்திலும் ஆரம்பத்தில் பெண்கள் கௌரவிக்கத் தக்கவர்கள் என்ற சிறந்த கொள்கையைச் சீர்திருத்த முறையிலும் கைக்கொண்டு பலருக்கு வழி காட்டக் கூடிய முதன்மை ஸ்தானத்தைப் பெருந்தன்மையுடன் கைக்கொண்டிருப்பது பற்றி பெண்ணுலகம் நன்றிபாராட்டவும் வாழ்த்துக் கூறவும் கடமைப் பட்டிருக்கிறதை ஞாபகப்படுத்தி இதை முடிப்போம்.

## கர்ப்பிணிகளின் பராமரிப்பு.

சுகப்பிரஸவமும், வியாதியில்லாத அழகிய குழந்தையும் வேண்டுமென்று ஆசைப்படும் ஸ்திரீகள் கர்ப்ப காலம் 9 மாதமும் தங்களுடைய சரீரத்தை நன்றாகக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும். பிரஸவ மென்பது ஸ்திரீகளுக்கு இயற்கையாக ஏற்பட்டதாதலால் கர்ப்பம் சரியாகத் தரித்த ஸ்திரீகள் உடம்பை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொண்டால் போதுமானது. அவர்கள் ஆரோக்கியமான முறைகளை அனுஷ்டித்து வருகிறவர்களாயிருந்தால் ஒருவித மாறுதலும் செய்ய வேண்டியதில்லை. முக்கியமாக உணவு, உடை, சிரம பரிகாரம், சுத்தமான காற்று, மலச்சிக்கலில்லாமல் காப்பாற்றி கொள்ளுதல் முதலிய விஷயங்களைத்தான் அவர்கள் கவனித்துக் கொள்ளவேண்டும்.

உணவு:—சாமான்யமான உணவாக வேண்டியவளவு புசிக்க வேண்டும். கூடியவரையில் வாய்க்குப் பிடித்ததைச் சாப்பிடலாம். ஆனால் தாயினுடைய ரத்தத்திலிருந்துதான் கர்ப்பத்திலுள்ள சிசுவுக்கு உணவு கிடைக்கிறது. ஆகவே தாயின் ரத்தத்தில் கோளாறு ஏற்பட்டால் அது வயிற்றிலுள்ள சிசுவைப் பாதிக்கும். கர்ப்பிணிகள் பெரும் வயிறு கொண்டலையக் கூடாது. விருந்துப்படியான உணவுகளையும், ஊர்காய்களையும் கூடிய வரையில் விலக்கி விடவேண்டும். நல்ல பாலை ஏராளமாகச் சாப்பிடவேண்டும். மலசுத்தி சரியாக ஏற்படுவதற்காகச் சாப்பாட்டுடன் பழவகைகளையும், காய்கறிகளையும் உபயோகித்துக் கொள்ளலாம். மலச்சிக்கல் தேகத்திற்குக் கெடுத

லானது. சுகப்பிரஸவத்தையும் அது கெடுத்து விடும். கர்ப்பம் முற்ற முற்ற உணவைக் கொஞ்சமாகவும் அடிக்கடியும் சாப்பிட வேண்டும். மலச்சிக்கலிருந்தால் 2 முதல் 4 ஸ்பூன் விளக்கெண்ணெயைப் படுத்துக் கொள்ளும்பொழுது சாப்பிட்டு, மலத்தைக் கழித்துக் கொள்ளவேண்டும்.

உடை:—இந்தியாவின் சீதோஷ்ண ஸ்திதியையும், சாதாரணமாக நாம் ஆடைகளை அணிந்துகொள்ளும் தோரணையையும் உத்தேசிக்கையில், கர்ப்பிணிகள் விஷயத்தில் பிரத்தியேக முறையைக் குறிப்பிடுவது அவசியமென்று தோன்றவில்லை. நாம் சாமான்ய முறையிலேயே ஆடைகளை அணிந்து கொள்ளுகிறோம். அவைகள் தளரவும் கட்டிக்கொள்ளப்படுகின்றன. தேகத்தின் ரத்த ஓட்டத்தை அது ஒருக்காலும் பாதிக்காது. மார்பிலும், அடிவயிற்றிலும் திடீரென்று உஷ்ணமாவது குளிர்ச்சியாவது தாக்க இடங்கொடுக்கக் கூடாது. இதற்காகக் கம்பளிச் சொக்காய்களை அணிந்துகொள்வது உத்தமமாக இருக்கும். கோடைகாலத்தில் கம்பளிச் சொக்காய்களைப் போட்டுக்கொள்வது ஸ்திரீகளுக்குக் கஷ்டமாக விருக்கலாம். கம்பளிக்கு உஷ்ணத்தை உண்டுபண்ணவும் ஈரத்தை கிரகித்துக் கொள்ளவும் சக்தியுண்டு. ஆகவே கோடை காலத்தில் அது வியர்வையை இழுத்துக் கொண்டுவிடும்; மழை காலத்தில் தேகத்தில் சீதளமுண்டாகாமல் காப்பாற்றும். பிடிப்பாக பெல்ட்டுகளை அணிந்து கொள்ளக்கூடாது.

சிரம பரிகாரம்:—கர்ப்பிணிகளுக்குச் சரீர சிரமமேற்படக்கூடிய வேலைகளையே கொடுக்கக்கூடாதென்கிற தப்பான எண்ணம் பலருக்கிருந்துவருகிறது. அவர்கள் வீட்டு வேலைகளைக்கூட செய்யக்கூடாதென்று பலர் நினைக்கிறார்கள். பளுவை இழுத்தல், கனமான மூட்டைகளைத் தூக்குதல், ஓடுதல் முதலிய வைகளெல்லாம் கெடுதலை உண்டு பண்ணும்; ஆனால் ஒரு வேலையு மில்லாமலிருந்தாலும் அதுவும் கெடுதல்தான். சுகசரீரியாகவிருக்கிற கர்ப்பிணிகள் பிரசவ காலத்திற்கு இரண்டு மாதம் முன்வரையில் கிரஹ கிருத்தியங்களைச் செய்து வரலாம். சரீரத்திற்கும், மனதிற்கும் சுமாராகவேனும் வேலை கொடுத்தால் தான் உடம்பு கெடாமலிருக்கும். சாதாரணமாக, தினம் ஒரு மணி நேரம் வெளியில் உலாத்தினால் நலந்தான். ஆனால் நமது தேச சம்பிரதாயங்கள் அதற் கிடங்கொடுக்காததால் வீட்டுக்குள்ளேயாவது கர்ப்பிணிகள் நன்றாக நடமாடி, கிரக வேலைகளைச் செய்துவரவேண்டும். கர்ப்ப ஸ்திரீ சுவாசிப்பதற்குச் சுத்தமான காற்று ஏராளமாக இருக்கவேண்டும். இல்லாவிட்டால் அவளுக்கும், கருப்பத்திலிருக்கும் சிசுவுக்கும் வியாதி ஏற்படக்கூடும்.

# ஜ்வரம்.

மனிதர்களுக் கேற்படும் பல நோய்களில் ஜ்வரமென்பது எளிதில் உண்டாகக் கூடியது. ஏனெனில் பல வியாதிகளும் ஜ்வரத்தையே ஆரம்பமாகக் கொண்டு பிடிக்கின்றன. தேக ஆரோக்கியத்திற்குக் கபம், வாதம், பித்தம் என்ற இம்மூன்று அம்சங்களும், ஏற்றத் தாழ்வின்றி ஒரு நிலையிலிருத்தல் இன்றியமையாததாகும். அளவு கடந்து புசித்தல், வேளாவேளைக்கு ஆகாரமின்மை, அற்ப ஆகாரம், மனித வாழ்க்கைக்கேற்பட்ட எக்காரியங்களிலும் மிதமின்மை இவைகளால் பித்தம், வாதம், கபம் இம்மூன்றி லொன்றோ, அல்லது இம் மூன்றுமோ, நிலை மாறிவிடுவதால்க் குடலில் உஷ்ணமேற்பட்டு ஜ்வர ரூபமாய் வெளிப்படுகிறது.



முக்கியமாக ஜ்வரம் எண்வகைப்படும். எல்லாவகைக்கும் உடம்பில் பாரம், மலச்சிக்கல், தூக்கமின்மை, அஜீரணம், தேகத்தில் வலி இவைகள் முக்கிய அறிகுறிகளாகும். கப வாத பித்தங்களில் எது மேலிருக்கின்றதோ அதை முதன்மையாகக் கொண்டு ஜ்வரத்திற்குப் பெயர் ஏற்படுகிறது.

அவையாவன:—

1. வாத ஜ்வரம்.
2. பித்த ஜ்வரம்.
3. கப ஜ்வரம்.
4. பித்த வாத ஜ்வரம்.
5. கப வாத ஜ்வரம்.
6. பித்த கப ஜ்வரம்.
7. சன்னி பாத ஜ்வரம்.
8. அதிர்ச்சி ஜ்வரம்.

1. தேகத்தில் வாதமதிகரித்தால் குளிரால் தேக நடுக்கம், உடம்பில் அதிக வலி, தொண்டையிலும் உதட்டிலும் வரட்சி இவைகளேற்படுகின்றன. இது வாத ஜ்வரமெனப்படும்.

2. பித்த மதிகரித்தால் தலைவலி, வாந்தி, அடிக்கடி மயக்கம், பிசுக்கென்ற வியர்வை இவைகளுண்டாகும். இது பித்த ஜ்வரமெனப்படும்.

3. கபம் அதிகரித்தால் வாயில் அரோசிகம், ஆகாரத்தில் வெறுப்பு, அதிகத் தூக்கம், இருமல் இவை மேலிட்டிருக்கும். இது கப ஜ்வர மெனப்படும்.

4. பித்தம், வாதம் இவையிரண்டும் அதிகரித்தால் அதிக தாகம், மயக்கம், உதட்டில் வலியும் வரட்சியும் ஏற்படும். இதற்குப் பித்த வாத ஜ்வரமெனப்படும்.

5. கபம், வாதம் இவ்விரண்டும் அதிகரிப்பதால் உடம்பு வலி, அதிக வியர்வை, தூக்கம் இவைகள் உண்டாகும். இது கப வாத மெனப்படும்.

6. பித்தம், கபம் இவை மேலிடுவதால் இவ்விரு ஜ்வரங்களுக்கும் தனியே யுள்ள அடையாளங்கள் கலந்திருக்கும். இது பித்த கப ஜ்வர மெனப்படும்.

7. பித்தம், வாதம், கபம் இம்மூன்றும் ஏககாலத்தில் மேலிட்டு விட்டால் இதற்கு சன்னிபாத ஜ்வரமென்று பெயர். ஜ்வரத்திற்குரிய பல கோளாறுகளுடன் பிதற்றல், ஸ்மாணை தப்புதல், நாவு கறுத்துப் போதல், பல் கிட்டிப்போதல், தேக நிறம் குன்றல், கை கால்கள் ஜில்லிடுதல் இவைகளும் காணப்படும்.

8. பலத்த காயங்கள், விஷ சம்பந்தம், அதிக துக்கம், பெருந் திகில், இவைகள் காரணமாக அதிர்ச்சி ஜ்வர மேற்படுகிறது.

வாதம் மேலிடுதல், பயம், கோபம் இவை காரணமாக ஏற்படும் ஜ்வரங்கள் தவிர, எல்லா ஜ்வரத்திற்கும் (லங்கணம்) பட்டினி யிருத்தலே சாதாரணமாகக் குணத்தைத் தரும்.

ஜ்வரம் நீங்கியதற்கு நாவில் ருசி யுண்டாகுதல், தாராளமான வியர்வை, தேக கனம் நீங்குதல், ஆகாரத்தில் விருப்பம், மயக்கமில்லாத தூக்கம், இவைகளே முக்கிய அறிகுறிகள்.

*M. A. Journal.*

## சகோதரி வி. பாலம்மாள் பிரசுரங்கள்.


## SUBODHA RAMA CHARITHAM

A Sanskrit Poetry of Ramayana, written in a simple style.

**Very useful for beginners. Price As. 6 Postage extra.**

Approved by the Text-Book Committee, Madras, as suitable for School Reading, *vide* p. 457, *Fort Saint George Gazette*, 6th Aug. 1918.

Approved by the Inspector-General of Education in Mysore, as a suitable Text-book for the IV Standard of Sanskrit Schools in the State.

Proceedings of the D. P. I., Bombay, 10652, dated 6-12-17 :—

* * "the book 'Subodha Rama Charitham,' price six annas, is sanctioned as a prize and library book for Secondary Schools in this Presidency."

The D.P.I., Bengal, No. $\frac{3400-AC}{3T/175-AC-15}$, dated 6th December 1918 :—

**Approved as a prize and library book for use in Schools in this Presidency.**

### திலகவதி.

ஓர் இனிய தமிழ் நவீனம். சென்னை சர்வகலாசாலை போதகாசிரியர் ராவ் சாகேப் Dr. S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் அவர்கள் முன்னுரையுடன் கூடியது. D. Cr. 16mo. 320 pp. Re. 1-4-0. **Approved as a Library Book.**

The book contains among other things a discussion of Patel's Civil Marriage Bill: Difficulties of journey by rail on the South Indian Railway; a summary of the War, etc., etc.

### தேவதத்தன்.

ஒரு தமிழ் நாவல். Royal 16mo. about 70 pp. விலை அணா 5.

The book contains the story of a rich young man who devoted his time and energy to the uplift of labourers.

### உண்மைக்காதல் அல்லது ஒற்றுமையின் வெற்றி.

ஆசார சீர்திருத்தத்தில் உண்மையான தேவைகளை எடுத்துரைக்கும் நாவல். Cr. 8vo. 64 பக்கம். விலை அணா 5.

### இந்தியக் கைத்தொழில் சிறப்பு.

இது இந்தியக் கைத்தொழில் விசாரணைச் சங்கத்தின் அறிக்கையில் கனம் பண்டித மதன்மோஹன மாளவியா அவர்களின் தனிக் குறிப்பின் தமிழ் மொழிபெயர்ப்பாகும். ராவ் பகதூர் T. ரங்காசாரியார், B.A., B.L., அவர்கள் எழுதிய முன்னுரையுடன் கூடியது. Cr. 8vo. 216 பக்கம். விலை ரூ. 1.

### ராஜசேவையும் இந்தியரும்.

இது இந்திய பப்ளிக் ஸெர்விஸ் கமிஷனில் மெம்பராயிருந்த கனம் ஜஸ்டிஸ் அப்துர் ரஹீமின் மறுப்புரையின் தமிழ் மொழிபெயர்ப்பாகும். "ஹிந்து" பத்திரிகாசிரியர் ஸ்ரீமான் S. கஸ்தூரிரங்க அய்யங்கார், B.A., B.L., அவர்கள் முன்னுரையுடன் கூடியது. Demy 8vo. 210 பக்கம். ரூ. 2.

சகோதரி வி. பாலம்மாள்,
'விவேகாச்ரமம்,' ஸலிவன்ரோட், மைலாப்பூர், சென்னை.




# குழந்தைகளுக்கு உண்டாகும் வியாதிகளும் மரணங்களும்.

ஸ்ரீமான் ஏ. சொக்கலிங்கம் பிள்ளையவர்கள் எழுதியது.

(காபிரைட்.)

குழந்தைகள் மரணத்திற்குக் காரணங்கள். சென்னை நகரில் வருஷவாரியில், ஒரு வருஷத்திற் குட்பட்ட குழந்தைகளில் ஏறக்குறைய 5300 குழந்தைகளும், ஒரு வருஷத்திலிருந்து ஐந்து வயதுக்குள்ளாக 2800 குழந்தைகளும் இறக்கின்றன வென்று கணக்கிட்டிருக்கின்றனர். மேற் சொன்ன 5300 குழந்தைகளுள் பிறந்த முதல் மாதத்திலேயே 2409 குழந்தைகள் இறந்து விடுகின்றன. இவ்வாறு குழந்தைகளின் மரணம் அதிகப்பட்டிருப்பதற்குக் காரணம் என்னவென்று விசாரிக்கும்போது நூற்றுக்கு 50 மரணங்களுக்கு மேல் அவ்வளவும் தடுக்கக்கூடிய வியாதிகளின் பயனேயாகுமென்று தெரிய வந்தது. இதற்குச் சிறு குழந்தை யென் செய்யும். குழந்தையினுடைய ஜீவனுக்கும் வளர்ச்சிக்கும் தேவையான வொவ்வொன்றும் தன் தாயினுடைய அல்லது அதனை வளர்க்குந் தாதியினுடைய வசத்திலேயே யிருக்கின்றது. முதல் வருஷத்திலேயே இறந்து விடுகிறதற்கு மிகச் சாதாரணமானகாரணங்கள் இசுவு (Convulsion), பலவீனம், வயிற்றுப் போக்கு, சுவாசப்பை அழற்சி (Pneumonia), தட்டம்மை முதலியனவாம். இந்நோய்கள் குழந்தைகளுக்கு வாவொட்டாமல் தடுப்பது மிகச் சுலபமாகும். ஆனால், அவற்றிற்குப் பரிகாரஞ் செய்வது மிகக் கஷ்டமாகும். இவ்வியாதிகளினின்றுங் குழந்தைகளைக் காப்பாற்றுவதற்குத் தாய்மார்கள் அல்லது தாதிகள் அதிக சாக்கிரதை யுள்ளவர்களாயிருத்தல் வேண்டும்.

வயிற்றுப் போக்கினால் ஏன் அநேகங் குழந்தைகள் இறக்கவேண்டும். வயதில் முதிர்ந்தவர்கள் வியாதிக் கிருமிகளைத் தடுத்துக் கொள்ளக் கூடியவர்களா யிருக்கின்றார்கள்; ஆனால் அக் காரியம் குழந்தைகளால் முடியாது. குழந்தைகளின் மெல்லிய உடம்பில் கிருமிகளை கொல்லும் சக்தி இல்லை. குழந்தைகளின் தாய்மார்களும் மற்ற சனங்களும் வியாதிக் கிருமிகளா லுண்டாகும் அபாயத்தை உணராமையினாலே அவர்கள் கிருமிகளினின்றுந் தங்கள் குழந்தைகளைக் காப்பாற்றிக் கொள்ளுகிறதில்லை. குழந்தையின் வயிறு பாலைத் தவிர வேறெவ்வித ஆகாரத்திற்குந் தகுதியானதல்ல. அவ்வாறிருந்தும் சனங்கள் குழந்தைக்கு வாழைப்பழம், தோசை முதலிய கெட்டியான ஆகாரங்களைக் கொடுக்கின்றார்கள். அவ்வாகாரங்கள் வயிற்றிலுங் குடலிலுந் தங்கிக் கிருமிகள் வளருவதற்கு இடமாகின்றது. சனங்கள் குழந்தைகளுக்கு அசுத்தமான நீரைக் குடிப்பாட்டுகிறார்கள். அவர்கள் குழந்தைகளின் மேல் ஈக்கள் நடந்து செல்லும்படியாகவும் குழந்தைகளின் கைகளிலும் முகங்களிலும் வியாதிக் கிருமிகள் தங்கும்படியாகவும் அவற்றை கிடத்துகிறார்கள். இன்னும் அவர்கள் குழந்தையினுடைய வாயில் அபாயமுள்ள வியாதிக்கிருமிகள் புகும்படி அசாக்கிரதையா யிருந்து விடுகிறார்கள். குழந்தைகள் மரணம் அதிகப்படுவதற்கு இன்னொரு காரணமாவது: இரவில் குழந்தைகள் தூங்கும்போது சரியானபடி அதன் உடம்பைப் போர்வையால் மூடுகிறதில்லை; அதனால், குழந்தைகள் சலதோஷம் பிடித்து வருந்தி வியாதிக் கிருமிகளை எதிர்ப்பதற்கு முடியாதபடி அவற்றின் உடம்புகள் பலவீனப்பட்டு விடுகின்றன.

கிருமிகளினின்றுங் குழந்தையைப் பாதுகாத்தல். குழந்தை குடிப்பதற்குக் கொதித்த நீரைக்

காத நீரை ஒருநாளுங் கொடுக்கக் கூடாது. எல்லோரும் இந்த நியமத்தை அனுசரிப்பது சுகவழியாகும். வயது முதிர்ந்த ஒருவனுக்குத் துன்பஞ் செய்யாத சில கிருமிகள் ஒரு குழந்தைக்கு அதிக நோயை யுண்டாக்கலாம். பட்டணத்துள் சுகாதாரமுறையாகக் கொண்டுவரப்பட்ட ஜலமேயானாலும், அதனைக் கொதிக்க வைக்காதவரை குழந்தை குடிப்பது அபாயமேயாம். குழந்தை குடிக்கும் பாலில் ஜலஞ் சேர்க்கும்போது சுத்தமான கொதி ஜலத்தையே சேர்க்கவேண்டும். குழந்தையை ஒரு நாளைக்கொருதரம் சன்னமான பச்சை பருப்புத் தூள் அல்லது மொச்சக்கொட்டைத் தூள் அல்லது நல்லதும் எரிச்சலை யுண்டாக்காததுமான சோப்பு தேய்த்து வெந்நீரில் குளிப்பாட்ட வேண்டும். நம்மவர்கள் வாரத்திற்கு இரண்டு முறை அல்லது மூன்று முறை குழந்தைகளுக்கு எண்ணெய் ஸ்நானஞ் செய்து வருகிற வழக்கம் நன்மையைத்தரும். இது சம்பந்தமாக உங்களுக்கு ஒரு முக்கிய சங்கதி சொல்ல விரும்புகிறேன். அதனை எல்லோருங் கவனித்தல் வேண்டும். நம்மவர்களில் அநேகர் தங்கள் குழந்தைகள் எண்ணெய் ஸ்நானஞ் செய்வதற்கு நாட்டு மருத்துவச்சியாகிய அம்பட்டத்தியை வரவழைத்து ஸ்நானஞ் செய்விக்கிறார்கள். குழந்தைகள் ஸ்நானஞ் செய்த பிறகு அவள் என்ன செய்கின்றாள்? புகையிலைக் காம்பும் வெத்திலைபாக்கும் போட்டு மென்று அடக்கிக் கொண்டிருக்கும் தன் வாயினால் குழந்தையின் மூக்குத் துவாரங்களில் ஊதுகிறாள். இவ்வாறு ஊதுவதால் குழந்தையின் நெஞ்சிலுள்ள கோழை வெளியே வந்துவிடுமென்பது அவளெண்ணம். இவ்வித செய்கையை ஒரு ஐரோப்பிய டாக்டர் நோக்குவாராயின் என்ன நினைப்பாரோ; அம்பட்டத்தியை என்ன செய்வாரோ; அதை நீங்களே தெரிந்து கொள்ளுங்கள். இக்காரியத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும் குழந்தையின் தாயும் மற்றவர்களும் சும்மா யிருந்துவிடுகிறார்கள். அவள் குழந்தைக்கு நன்மை செய்தாளா அல்லது தீமை செய்தாளா? தீமையே செய்தனள். நாம் வெளிக்காற்றை உள்ளுக்கிழுத்து அதனின்றும் பிராண வாயு (Oxygen) வை நிறுத்திக் கொண்டு கரியமிலவாயு (Carbonic acid) வை வெளியே விடுகின்றோம்; ஆதலால், அவள் குழந்தையின் மூக்கில் ஊதியது கிருமிகளும் புகையிலை நாற்றமுங்கூடிய கரியமிலவாயுவேயாகும். இக்காரியம் மிகவும் அருவருக்கத்தக்கதும் அபாயத்திற் கிடமானதுமாக இருக்கின்றது. சௌக்கியமாயிருக்குங் குழந்தையை வயிற்றுப் போக்கால் துன்பப்படுகிற குழந்தைக்குத் தூரமாகவே வைக்க வேண்டும்; ஏனெனின், வயிற்றுப்போக்குக் கிருமிகள் இன்னொரு குழந்தையைத் தொற்றக்கூடும். குழந்தையை ஈக்கள் மொய்க்காதபடி மறைவு திரைக்குள் வைப்பது முக்கியமாகும்.

(இன்னும் வரும்.)

# ஒரு வேண்டுகோள்.

எனது அன்புள்ள சகோதரிகளே, உண்மையுள்ள சகோதரர்களே :—

பெண் மக்கள் எக்காலத்திலும் கஷ்டப்படாமலும் கண்ணீர் விடாமலும் காலங் கழித்தலே உலக க்ஷேமத்திற் கடையாளமாகும். முற்காலத்தில் பெண்கள் சந்தோஷமாயும் கண்ணியமாயும் வாழ்ந்து வந்தார்கள் என்பதற்கு அவர்களின் கல்விப் பயிற்சியே காரணமாயிருந்தது. தற்காலம் பால வைதவ்யத்தாலும் ஏழ்மையாலும் நம் சகோதரிகள் படும் கஷ்டம் அளவு கடந்ததே. இவர்களுக்குக் கல்விப் பயிற்சி யுண்டானால் தங்கள் நிலைமையை யறிந்து கூடியவரையில் ஜீவனத்திற்குச் சிரமமின்றியும் மனதிற்குச் சமாதானத்துடனும் காலங்கழிக்




கலாமல்லவா? தற்காலம் ஆங்காங்கு பெண் பாடசாலைகளும் உயர்தரக் கலாசாலைகளும் ஏற்பட்டு வருகின்றனவாயினும் அவைகளால் பொதுவாய் பெண் சமூகத்திற்குத் தக்க ஆதரவு ஏற்படக் காணோம். ஒரு பெண் ஏழையாயிருக்கலாம்; இளங் கைம்பெண்ணாய் இருக்கலாம்; பல குழந்தைகளுக்குத் தாயாகவிருக்கலாம்; சம்பத்துள்ளவளாக இருக்கலாம். ஆனால் எவ்வகையிலிருந்த போதினும் தன் நிலைமையையும் கண்ணியத்தையும் இன்னதென்று அறிந்து கொள்ளக் கூடிய தாயும் தன் வாழ் நாளின் நோக்க மின்னதென்பதைத் தீர்மானிக்கக் கூடியதாயும் கஷ்ட காலத்தில் தைரியத்தையும் நல்ல காலத்தில் அமைதியையும் கொடுக்கக் கூடியதாயும் உள்ள கல்விப் பயிற்சியை ஒவ்வொரு பெண்மகளும் தனது யுக்த வயதுக்குள் தேடிக்கொள்ளல் அவசியமாகும். தேச காரியங்களில் பலர் ஈடுபட முடியாதவர்களாயிருப்பினும் தேசத்தின் நிலைமை இன்னதென்பதைப் பெண்கள் அறிந்து கொள்வது முக்கியம். தேச நிலைமையைப் பற்றி ஆராய்ச்சியும் தேச முன்னேற்றத்தைப் பற்றிக் கவலையும் பெண்மக்கள் மனதில் பதிந்துவிடுமாயின் வீட்டிற்குள்ளிருந்தவாறு பல குடும்பக் காரியங்களுக்கிடையிலும் தேசத்தைப் பற்றிய சிந்தனைகள் அவர்களுக்கு ஏற்படக்கூடியது நிச்சயம். தன் தாய் நாட்டைப் பற்றியும், தன் இனத்தவரின் தற்கால நிலைமையைப்பற்றியும், அவர்களின் முன்னேற்றத்தைப் பற்றியும், தன்மக்களின் எதிர் கால நிலைமையைப் பற்றியும், தேச சேவையில் ஆடவர்களுக்குள்ள கடமையைப் பற்றியும் இந்தியாவிலுள்ள ஒவ்வொரு பெண்மகளும் மனதில் சிந்திப்பதால் உலகம் க்ஷேமமடைவது உண்மை. இது பற்றி பெண்மக்கட்குரிய படிப்பு, பெண்கள் சுதந்திரம், பெண்கள் கடமை, பெண்களும் குடும்ப வாழ்க்கையும், பெண்களும் தேச சேவையும் இவைகள்போன்ற பல முக்கிய விஷயங்களையும், தீண்டாமை ஒழித்தல், கதர் உடுத்தல் இவைகளைப் பற்றியும் தீவிரமாகப் பிரசாரம் செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் சிந்தாமணி என்ற இத்தமிழ் பத்திரிகையை ஆரம்பித்திருக்கிறேன். பத்திரிகை நடைபெறுவதற்குப் பொருள் உதவி அவசியமானதால் தயவு செய்து ஒவ்வொருவரும் இப்பத்திரிகை கைக்குக் கிடைத்ததும் சற்றும் தாமதமின்றி வருஷ சந்தா ஐந்து ரூபாயையும் முன்பணமாக மணியார்டர் செய்ய வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன். வி.பி.யிலனுப்புவதில் தற்சமயம் கஷ்ட மதிகம். விலாசக்காரர் ஊரிலில்லாவிட்டால் திரும்பியும் வந்துவிடுவதால் நஷ்டமுமேற்படும். ஆகையால் முன்பணமாக ஒவ்வொருவரும் சந்தாவை அனுப்பிச் சிந்தாமணியைச் சிறப்பாக நடப்பித்தல் தமிழ் நாட்டிலுள்ள எனது சகோதரி சகோதரர்களின் கடமை என்பதே எனது வேண்டுகோள்.

சகோதரி வி. பாலம்மாள்.

———

குறிப்பு.—இந்த இதழில் தோன்றும் "கர்ப்பிணிகளின் பராமரிப்பு" என்னும் வியாசம் "ஆரோக்கிய போதினி" யிலிருந்து எடுத்துக் கையாளப்பட்டது. (ப-ர், சி.)






# பத்திராதிபர் குறிப்புகள்.

சூரிய கிரணங்கள் தேசத்தில் படுவது ஆரோக்கியத்திற்கேற்றது. துர்பலத்திற்கு மீன் எண்ணெய் சாப்பிடுவதனால் உண்டாகும் நன்மை சூரிய கிரணங்களில் இருப்பதாக ஆராய்ச்சிக்காரர்களான பல வைத்திய நிபுணர்கள் கூறுகின்றார்கள். தேகத்தில் ஜீவியசத்துப் பொருள்கள் அதிகமாக விருந்தால் வியாதிகள் அணுகா. சூரிய கிரணங்களில் ஜீவியசத்துப் பொருள் இருப்பதால் சூரிய வெப்பம் அதிகமாக உள்ள இடங்களில் வியாதிகள் அதிகமில்லை. நமது தேகம் வளர்வதற்குச் சூரியவொளி அத்யாவசியமாயிருந்தும் ஐரோப்பியர்களாகிய நாம் அதிகப்படியான துணிகளை அணிந்து கடவுளால் அளிக்கப்பட்ட இவ்வரத்தை முட்டாள்தனமாக ஏற்காமலிருப்பதால் நம் தேகம் சீர் குலையக்கூடும் என்று டைம்ஸ் ஆப் இந்தியா என்னும் ஆங்கிலப் பத்திரிகை கூறுகின்றது. புண்ணிய பூமியாகிய நம் இந்தியாவிலுள்ள பூர்வீக ஆசார அனுஷ்டானங்கள் ஒவ்வொன்றும் நோயற்ற வாழ்வை யளிக்கக் கூடியதாயிருந்தும் தற்கால நாகரீகப் பெருங்கால் அவை குன்றி வருகின்றன. சிந்தாமணி 28-வது பக்கத்திலுள்ள படம் இதைத்தான் குறிப்பிடுகிறது. சொந்தத்தில் நூற்று நெசவு செய்தலைக் கைவிட்டவுடன் அனாவசியமாய் அயல் நாட்டாரைப்போல் உடை உடுக்க ஆரம்பித்ததிலிருந்தே இந்தியா ஏழ்மையுற்றுச் சரீரத்திடமும் குறைவடைந்து க்ஷீணிக்க ஏதுவாயிற்று. ஒன்றின்மேலொன்றாய் ஆடை மாட்டிக் கொள்ளும்போது மெல்லிய துணிகள் அவசியமாகிறதன்றி அவசியமான ஆடைகள் உறப்பாக இருப்பதில் அசௌகரியமே இல்லை. உடை உடுத்துவதில் 18 முழ நீளமும் பலவிதமான நிபந்தனைகளுமுள்ள தென்னாட்டிலேயே பெண்மக்களில் சிலர் கதருடுத்துகிறார்கள். 6 முழம் வேஷ்டியும் 3 முழத்தில் சொக்காயு மணியக்கூடிய ஆடவர்களில் சிலர் இன்னமும் கதரைக் கண்ணெடுத்துப் பாராமலுமிருத்தல் பரிதாபமே. அடிக்கடிக்காய் உள்ளே மடித்து வைக்காமல் அவசியமாயுள்ள ஆடைகளுக்குத் தேவையான சுத்த கதர்த் துணிகள் கிடைக்கக்கூடுமென்றே கதர் போர்ட் அறிக்கைகளால் விளங்குகிறது.

ராட்டினப் பயிற்சியை சிறுவயதில் சிறுமிகளுக்கு ஏற்படுத்திவிட்டால் பிறகு அவர்கள் அதைக் கைவிடாமலிருக்கக் கூடும். பீஹார் ஒரிஸ்ஸா சட்டசபையில் இவ்விதம் ஒரு தீர்மானம் ஜனப் பிரதிநிதிகளால் நிறைவேற்றப்பட்டது. பத்து வயதிற்கு மேற்பட்ட பெண்களுக்கு ஒவ்வொரு பள்ளிக்கூடங்களிலும் கட்டாயமாகக் கைராட்டினத்தில் நூல் நூற்கக் கற்றுக் கொடுக்கும்படிக்கும் ஆரம்ப பாடசாலைகளில் 10 வயதுக்கு மேற்பட்ட சிறுவர்களுக்கு இதை இஷ்டப் பாடமாக ஏற்படுத்தும்படிக்கும் அம்மாகாண கவர்ன்மெண்டுமே உத்திரவிட்டிருப்பதாகத் தெரிகிறது. நமது சென்னை சட்டசபை மெம்பர்களும் கவர்ன்மெண்டும் இதைப் பின்பற்றுவார்களா?

கல்வி யபிவிருத்தியில் சுதேச ராச்சியங்களுக்குள் பரோடாவில்தான் அதிக முன்னேற்றங்கள் காணப்படுகின்றன. தனவந்தர்களுக்கு மட்டும் சௌகரியமென்பதில்லாமல் ஆண்பெண் இருபாலருக்கும் எளிதில் கல்வி கற்கக்கூடிய பல வழிகள் இங்கு கையாளப்படுகின்றன. தாழ்ந்த வகுப்புப் பிள்ளைகளுக்கு எல்லாப் பாடங்களும் தேச பாஷை மூலமாக இலவசமாயும் கற்பிக்கப்படுகின்றன. ஆயிரக்கணக்கான புத்தகசாலைகள் பிரஜைகளுக்காக ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. நமது சென்னை மாகாணத்திலோ?

* * *

"சுதந்திரம் கோரும் ஸ்திரீ ரத்னங்களே! வீட்டைவிட்டு வெளியேறி எக்காரியத்தையும் சாதிக்க வரவேண்டாம். பெண்மக்களாகிய உங்களிடம் சிருஷ்டிகர்த்தா அழகையும், ரம்மியத்தையும் கொடுத்தான், உங்கள் கணவரை உற்சாகப்படுத்துவதற்காக புதிய ஊக்கத்தை மாறிமாறிக் கொடுப்பதற்காக, புருஷருக்குப் புத்துயிர் கொடுக்கும் புனித சஞ்சீவி உங்களிடத்தில் சிருஷ்டியிலேயே அமைந்திருக்கிறது. அதைக் கெடுத்துப் புருஷரின் ஊக்கத்தை யழித்துவிட வேண்டாம். வாழ்க்கை நிலைத்திற்கு ஆகாரமாயிருக்கிற அழகைக் கெடுத்துவிட வேண்டாம். வீட்டிலே அமைதியாக சந்தோஷமாகவிருங்கள். நீங்கள் வீட்டிலிருப்பதால் ஒரு தீங்கும் ஏற்படாது. உங்களுக்குச் சுகாதாரக் குறைவு ஒன்றும் ஏற்படாது. உங்கள் தேகக் கூறு அதற்கேற்றது. அதற்குப் பல அத்தாக்ஷிகளிருக்கின்றன. வீட்டில் அடக்கமாய் வாழ்ந்து வருகிற பெண்களைப் பாருங்கள். அவர்கள் சுதந்தரப் பெண்டிரைவிட அதிக அழகாயும் திடகாத்திரமாயுமிருக்கக் காண்பீர்கள். ஆண்களுடைய சரீரந்தான் வெளியிற் சுற்றியலைவதற்கேற்றது. ஆண்கள் வீட்டிற்றங்கினால் அவர்களின் அழகும் திடமும் குன்றும். உங்களுக்கப்படியல்ல. இன்னமுஞ் சொல்லுவோம். ஆத்திரப்படாமல் அமர்ந்து கேளுங்கள். ஆண்களை எவ்வழியிற் செலுத்த—எவ்வளவு உபயோகப்படுத்த நீங்கள் விரும்புகிறீர்களோ அவ்வழியுற் செலுத்தலாம், அவ்வளவு உபயோகப்படுத்தலாம். ஆண்கள் குதிரைகளாகவும் நீங்கள் அக்குதிரைகளை யோட்டும் சாரதிகளாகவும் இருக்கிறீர்கள். அக்குதிரையோடு நீங்களும் சேர்ந்து இழுக்கச் சென்றால் ஓட்டுவதற்கு யாவர் உளர்? அந்த ரதம் வாழ்க்கை இல்லரம் எங்ஙனம் நடைபெறும்? ஆகவே சாரதித் தொழிலை விட்டு விடவேண்டாம். அவர்களும் அப்பதவிக்கு ஏற்றவர்களன்று. அவர்கள் இழுக்கட்டும். உங்கள் ஸ்தானத்திற்குத் தீங்கு ஏற்பட்டிருக்கிறதென்பது உண்மையே! அதை நிவர்த்திக்கத்தக்க வழியைத் தேடுங்கள். "பொறுமைக்குப் பூமாதேவி" என்பர். அத்தேவியாரின் வகுப்பிலுள்ள நீங்கள் சற்று அநியாயமாய் நடத்தப்படுவதற்காகப் பொறுமையிழந்து அடாததைச் செய்து உலகத்தைக் கெடுத்துவிட வேண்டாம்." என்று ஒரு மாதரசி சுதேசிப் பத்திரிகையில் எழுதியுள்ளார்.

வீட்டு வேலைகளை வேலைக்காரரிடம் ஒப்புவித்துவிட்டு அனாவசியமாக வெளியில் உலாவுதலும ஓயாது ஆட்டங்களையும் வேடிக்கை விநோதக் காக்ஷிகளையும் பார்க்கச் செல்வதும் ஸ்திரீ சுதந்திரமாகக் கருதும் பெண்களுக்கு இது ஒரு சிறந்த புத்திமதியாகும்.

* * *

லண்டன்மா நகரத்தில் நடைபெற்று முடிந்த பிரபல வழக்கான ஓட்வியர் காயர் வழக்கில் மூன்று பெண் ஜூரர்கள் இருந்ததாக ஹிந்துப் பத்திரிகையில் காணப்படுகிறது. தங்களுக்குச் சாதகமான விஷயங்களில் மேல் நாட்டை உவமை கூறும் நம் ஆடவர்கள் ஜனசமூகத்தில் அரைப்பங்குக்கு மேலிருக்கும் பெண்மக்களின் விஷயத்தில் இனியேனும் சிரத்தை எடுப்பார்களா? தென்னாட்டில் பெண்களுக்கு ஜீவனாம்சம, சொத்து பாத்தியதை, விவாகம் இவைகளைப்பற்றியும் பெண்கள் குற்றம் செய்ததாக ஏற்படும் வழக்குகளிலும் பெண் ஜூரர்கள் இருத்தலவசியமல்லவா? சட்டசபை மூலமாக ஆடவர்கள் பிரயத்தினம் செய்வார்களாயின் ஜூரர் ஸ்தானம் வகிக்கக்கூடிய பெண்கள் சிலரேனும் இருக்கக் கூடுமென்பது நிச்சயம்.

* * *

"கலிகாலத்தில் மற்றோர் விநோதம் ஏற்பட்டு விடுமோ என்னவோ என எனக்கு அதிக பயமாயிருக்கிறது. இக்காலத்தில் அடுப்பூதும்



பெண்கள் "சுதந்தரம், சுதந்தரம்" என அடித்துக் கொள்ளுகின்றனர். அவர்களுக்குச் சமவுரிமை அளிக்கவேண்டியது உண்மையே. அதுவும் நம் கடமையே அவர்களை ஆடுமாடுகளைப்போல நினைத்து நடத்தலும் அநீதியே; ஆனால் கலிகாலக் கொடுமையினால் அவர்கள் உரிமை கொள்ளுவதுடன் தத்தம் கணவன்மாரை அடுப்பூதும் வேலையி லமர்த்தி விட்டுத் தாம் சம்பாதிக்க வெளிக்கிளம்பி விடுவார்களோ என்பது தான் நமக்கு அச்சம்! இதை நினைத்து வயிறு புண்பட நகைக்கவேண்டுமே யல்லாது வேறென்ன செய்ய" என்று இந்து நேசன் கூறுகிறது.

பெண் கல்வி இன்ன தென்றும் பெண்களின் சுதந்திரம் இன்ன தென்றும் இதுவரை நிர்மாணிக்கப் படாமையால் இத்தகைய அசம்பந்தமான வாதங்கள் ஏற்படுவது ஆச்சரியமல்ல.

## புத்தகக் குறிப்புகள்.

போஜ சரித்திரம்: நாகபட்டணம் ஸப்ஜட்ஜ் ஸ்ரீமான் K. S. ராமஸ்வாமி சாஸ்திரியார் அவர்கள் எழுதியது.

இப்பெயர் கொண்ட தமிழ் புத்தகம் வரப்பெற்றோம். போஜமகாராஜனின் சரித்திரம் வடமொழியிலுள்ளபடி சங்கிரகமாக எளிய தமிழ்நடையில் கூறப்பட்டிருக்கிறது. இத்துடன் போஜசம்புவைப் பற்றியும் விக்கிரமாதித்தன் சிங்காதனத்தைப் பற்றியும் சுருக்கமாக எழுதப்பட்டிருக்கிறது. நவரசாலங்கார பூரணமாயுள்ள வடமொழிக் கிரந்தங்களைத் தமிழில் சுவைகுன்றாது எளியநடையி லெழுதுவது சுலபமன்று. தமிழ் என்று இலக்கணத்திலேயே மூழ்கி விடாமலும் சுவைகுன்றாத மொழி பெயர்ப்பென்ற தாத்பரியத்தைக் கைவிடாமலும் இந்நூல் எழுதப்பெற்றிருப்பது கவனிக்கத் தக்கது. வடமொழியறியாதவர்களுக்கும் மாணவ மாணவிகளுக்கும் மெத்த உபயோகமுள்ளது.

ஆசிரியர் ஸ்ரீமான் கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரியர் அவர்கள் B.A., B.L. ஆனபடியினால் இப்புத்தகத்தைப்பற்றி அதிக மெழுதத் தேவையில்லை. சொற் சுவையும் பொருட் சுவையும்பொருந்தி விளங்கும் இப்புத்தகத் தின் விலை 10 அணா. தபாற்கூலி வேறு. மெஸர்ஸ் ஸ்ரீநிவாச வரதாசாரி அண்டு கம்பெனி (4, மவுண்ட் ரோட், சென்னை) யாரால் அச்சிடப் பட்டிருக்கிறது.

---

முதலாவது ராஜராஜ சோழன். சென்னை ஆர்க்கியலாஜிகல் இலாகாவைச் சேர்ந்த ஸ்ரீமான் P. V. ஜகதீச அய்யர் அவர்கள் எழுதியது.

"ராஜராஜ சோழன்" என்ற தமிழ் சரித்திரப் புத்தகம் நமது பார்வைக்கு வந்திருக்கிறது. "இந்தியர்கள் அரசன் ஆணைக்குட்பட்டு வாழ்ந்த குடிகள்" என்ற சொல் தற்காலம் நிலைத்திருக்கிறதன்றி அரசனால் குடிமக்களின் க்ஷேமமும் சுதந்திரமும் எவ்வாறு காக்கப்பட்டு வந்தன வென்பதை விளங்கக் கூறும் இந்திய சரித்திரப் புத்தகங்கள் குறைவென்றே சொல்லலாம். சில மன்னர்கள் தமது தர்ம ஸ்தாபனங்களில் வெட்டி வைத்த சிலா சாஸனங்கள் தவிர்த்து மற்றை ஆதாரங்கள் பல படையெழுச்சி காலங்களில் அழிந்து போயிருக்க நியாயமு முண்டு. அரசன் குடிமக்களுக்குச் சர்வ சுதந்திரங்களு மளித்துத் தந்தை [illegible] வந்ததாலேயே குடிகள் [illegible] அளவற்ற அன்புடன் "ந

212419.
190368

"விஷ்ணு: பிருதிவீபதி:" என்பதாக அரசனைத் தெய்வமாகப்போற்றி வந்தார்களென்பது புராண சித்தம். ஆனால் அவைகள் தெய்வீக சரித்திரமென்று வாதிக்கலாம். பத்தாவது நூற்றாண்டில் ராஜ்ஜிய பரிபாலனம் செய்து விளங்கிய ராஜராஜ சோழரது சரித்திரத்தை அவ்விதம் சொல்லமுடியாது. தெய்வ பக்தியும் பாண்டித்தியமும் தோள்வலியும் கப்பற்படையும் கொண்டு குடிமக்களுக்குப் பல விதத்திலும் சுதந்திரமும் சௌகரியங்களு மளித்து அரசு புரிந்த ராஜராஜ சோழரது சரித்திரத்தை வெளியிட்டிருக்கும் ஸ்ரீமான் பி.வி. ஜகதீசய்யரின் முயற்சி போற்றத்தக்கது. சித்திரப்படங்களுடன் இனிய நடையில் எழுதப் பெற்றிருக்கும் இதன் விலை அணா 8. சென்னை மவுண்ட் ரோட், ஸ்ரீநிவாஸ வரதாசாரி கம்பனியால் பிரசுரம் செய்யப் பெற்றது.

EVERY HOUSE
SHOULD STOCK A BOTTLE OF
**AMRUTANJAN**
THE BEST PAIN BALM.
**Price As. 10 a bottle.**

SIDDHA KALPA MAKARADHWAJA
(REGISTERED)
**THE WONDERFUL DISCOVERY IN THE MEDICAL WORLD**
**FOR ALL "ACUTE" & "CHRONIC" DISEASES**
ONE PHIAL OF 60 PILLS (for a Complete Cure).
**Price Rs. 10 (Rs. TEN). V. P. Extra.**
**THE MADRAS AYURVEDIC PHARMACY, LTD.**
44, Govindappa Naick St, G. T., Madras.

## EDITORIAL NOTICE.

1. Correspondence and literary contributions are invited from all ladies and gentlemen who are interested in problems relating to the advancement of women in general.

2. All articles should be legibly written in ink and on one side of the paper only.

3. The Editor is not necessarily responsible for the opinions of contributors.

4. All remittances and communications regarding advertisements, etc., should be addressed to the Manager.

5. All literary contributions, books for review, newspapers, magazines, etc., sent in exchange should be addressed to

THE EDITOR, "CHINTHAMANI,"
"*Vivekasrama,*" *Sullivan's Garden Road, Mylapore, Madras.*

---

## பத்திராதிபர் அறிவிப்பு.

1. வியாச மெழுதுவோர் தயவு செய்து ஒரே பக்கங்களில் தெளிவாய் எழுதி அனுப்புவதுடன் பெண்மக்களின் முன்னேற்ற விஷயமாகவே பெரும்பாலும் எழுத வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

2. வியாச மெழுதுவோர்களின் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்ல.

3. வியாசங்கள், மதிப்புரைப் புத்தகங்கள், இவைகளை பத்திராதிபர், "சிந்தாமணி" "விவேகாச்ரமம்" சலிவன்ஸ் கார்டன் ரோட், மைலாப்பூர், சென்னை, என்று எழுதவும்.

4. சிந்தாமணியின் நிர்வாக விஷயங்கள், விளம்பர சம்பந்தமான கடிதங்கள், ஆர்டர்கள் இவைகளுக்குக் கீழ்கண்ட விலாசத்துக்கு எழுதவும்.

மானேஜர்,
சிந்தாமணி ஆபீஸ்,
சலிவன்ஸ் கார்டன் ரோட், மைலாப்பூர், சென்னை.

# "CHINTHAMANI"

A high class illustrated Monthly in Tamil devoted mainly to the Cause of Indian Women at home and abroad.

**Editor: Sister V. BALAMMAL**

Subscription (payable in advance).

| | | | |
|---|---|---|---|
| Inland ... ... ... | Rs. 5/- | Single copy ... ... ... | As. 8 |
| Foreign ... ... ... | „ 6/- | | |

"**Chinthamani**" is an excellent medium for advertisements. Everything advertised in its columns is sure of attracting the attention of the whole of the Tamil-knowing public throughout India, Burma, Ceylon and other Colonies.

**The following are the rates for advertisements per insertion.**

Full page Rs. 8/- Half page Rs. 5/- Quarter page Rs.

Free Voucher Copy.

For long-term contracts please apply to

THE MANAGER,
THE "CHINTHAMANI" OFFICE,
*Sullivan's Garden Road, Mylapore, Madras.*

---

Printed by Srinivasa Varadachari & Co., 4, Mount Road, Madras,
and Published by Sister V. Balammal, Sullivan's Garden Road, Mylapore, Madras.